வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : news@eelanadu.lk மலர் : 05 29.11.2023 புதன்கிழமை இதழ் : 353 பக்கங்கள் : 12

## 2,321 டெங்கு நோயாளர் யாழ்ப்பாணத்தில்!

*யாழ்ப்பாணம், நவ. 29*

*யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டில், 2 ஆயிரத்து 321 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

*நேற்று யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். (ஐ)*

## இரு நாட்களுள் ஓ. எல். பரீட்சை பெறுபேறுகள்!

*கொழும்பு, நவ. 29*

*க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த*

11

## பிரதான வீதியையும் ஊடறுக்கும் கொக்குத்தொடுவாய் புதைகுழி

# அகழ்வை தொடர்வதா? இன்று முக்கிய முடிவு



முல்லைத்தீவு, நவம்பர் 29

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி, அருகிலுள்ள வீதியின் மத்தி வரை நீள்கிறது என்று ஸ்கான் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இந்தப் பகுதியை அகழ்வதா இல்லையா என்பது இன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் முடிவு செய்யப்படும்.

இதேநேரம், அகழ்வு பணிகள் மேலும் 8 வாரங்கள் வரை நீடிக்கப்பட வேண்டிய சூழல் ஏற்படலாமெனக் கருதப்படுகிறது. இந்நிலையில் அகழ்வை தொடர்வதில் வளங்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அகழ்வுப்பணியில் ஈடுபட்டுள்ள தரப்பினர் தெரிவித்தனர்.

11

## இந்திய தூதுவர் இன்று வடக்குக்கு வருகிறார்!

### நயினாதீவுக்கும் செல்கிறார்

*யாழ்ப்பாணம், நவ. 29*

*இந்திய தூதுவர் கோபால் பாக்லே மூன்று நாட்கள் பயணமாக இன்று புதன்கிழமை வடக்கு மாகாணத்துக்கு வருகிறார்.*

*அவரின் பயணத்தின் முதல் நாளான இன்று மதவாச்சியில் பாடசாலைகளுக்கான உதவித் திட்டங்களை கையளித்த பின்னர் மன்னார் பியர் பகுதி, திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கும் அவர் செல்லவுள்ளார்.*

*தொடர்ந்து முதல் நாளின் இறுதி நிகழ்வாக இரவு நேர விருந்துப*

11

## புலிகளின் சின்னம் பொறித்த ரீசேர்ட் அணிந்தவர் கைது

*யாழ்ப்பாணம், நவ. 29*

*விடுதலை புலிகள் அமைப்பின் சின்னம், தலைவர் பிரபாகரனின் படங்கள் பொறித்த ரீசேர்ட் அணிந்து மாவீரர் நாள் நினைவேந்தலில் பங்கேற்ற இளைஞரை பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.*




*தென்மராட்சி - கொடிகாமம் ஐயனார் கோவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞரே நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.*

*சந்தேகநபரான இளைஞர்,*

11

## அரசும் எதிர்க்கட்சியும் ஏற்றது போன்று மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டும்

### சித்தார்த்தன் எம். பி. வலியுறுத்து



*யாழ்ப்பாணம், நவ. 29*

*மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும் என்று பிரதமரும் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும் என்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் - இவவாறு வலியுறுத்தினார் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன்.*

*நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு,*

*பிரதமரின் பேச்சின் படி, மாகாண சபைத் தேர்தல் விடயமாக அவர் கூறிய விடயங்கள் - இரண்டு கட்சிகளுமே தேர்தல் நடத்த வேண்டும் என்று பாராளுமன்றில் சொல்கிறார்கள்.*

*தேர்தல் நடத்துவதிலே இருக்கக் கூடிய பிரச்னைகள்*

11

## மின்சாரம் தாக்கியதில் வங்கி ஊழியர் மரணம்

### சாவகச்சேரியில் நேற்று துயரம்

*தென்மராட்சி, நவ. 29*

*மின்சாரம் தாக்கி வங்கி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.*

*சாவகச்சேரி நகரில் உள்ள தனியார் வங்கியில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், சாவகச்சேரி - நுணாவிலை சேர்ந்த 26 வயதான நித்தியானந்தன் கஜலக்சன் என்பவரே உயிரிழந்தார்.*

*வங்கியிலிருந்த மின்சார மோட்டார் பழுதடைந்துள்ளது. அதன் திருத்த பணிகள் நடந்து கொண்டிருந்தபோது, தண்ணீர் தாங்கியின் தண்ணீர் அளவை பார்க்க சென்ற*

11

## மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் தயார்!

### பிரதமர் தினேஷ் சபையில் தெரிவிப்பு

*கொழும்பு, நவ. 29*

*‘‘மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அதற்கான கலந்துரையாடல்களுக்கு நான் அழைத்திருந்தேன். அதில் சிலர் கலந்து கொள்ளவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டிய தேவை இருந்தது.*

*- இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தெரிவித்தார்.*

*மேலும், ‘‘மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாராக*

11

## இலங்கை இனப் பிரச்னையை தமிழகம் புரிந்துகொள்ளவில்லை!

### இப்படி சொல்கிறார் முரளிதரன்



*கோவா, நவ. 29*

*இலங்கை உள்நாட்டு போரை - இனக் கலவரத்தை இந்தியாவின் தமிழ் நாடு அரசு சரியாகப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது - இவ்வாறு கூறியிருக்கிறார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.*

*இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் அவரின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு உருவான ‘800’ திரைப்படம் திரையிடப்பட்டது. இதில், பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*மேலும்,*

11

## இப்படியும் நடக்கிறது

நேற்றைய இந்தப் பத்தியைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் அதிகாலையே தொலைபேசியில் கேட்டார், 'சிங்களத்தில் படையினருக்கு வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும்' என்று பேசிய அந்த எம்.பி. யார் என்று எழுதவில்லையே என்று.

நான் கேட்டேன், 'சிங்களத்தில் பேசக்கூடியவர் ஒருவர் தானே எம்மிடம் இருக்கிறார்' என்று.

அதற்கு அவர், 'இல்லையே இருவர் இருக்கிறார்களே. சாணக்கியன் மற்றும் சுமந்திரன்..' என்றார்.

சுமந்திரன் சில வேளைகளில் சிங்கள மொழி தொலைக்காட்சிகளில் அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விவாதிக்கின்ற வேளைகளில் சிங்களத்திலும் பேசியிருக்கிறார்தான். ஆனால், அவர் சிங்களத்தில் சரளமாகப் பேசக்கூடியவர் அல்ல. கொழும்பில் கல்வி கற்றதாலும், அங்கேயே வாழ்ந்து வருவதாலும் அவரால் சிங்களத்தில் பேசமுடியும் என்றாலும், பாராளுமன்ற விவாதங்களில் சிங்களத்தில் பேசி நான் காணவில்லை என்றேன்.

படையினருக்கு வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும் என்றும் சம்பளங்களை அதிகரிக்கவேண்டும் என்றும் பாராளுமன்றில் சிங்களத்தில் குரல் கொடுத்தவர், நமது இராசமாணிக்கம் ராசபுத்திரன் சாணக்கிய தான் என்பது நேயர்களுக்கு புரியும் என்பதால் தான் அவரின் பெயரை தவிர்த்திருந்தேன்.

ஆனால், அவரது பேச்சை அவரது முகநூலில் கேட்டபின்னர் அவரது நண்பர் ஒருவர் அதுகுறித்து அங்கே பதிவிட்டுள்ள குறிப்பு ஒன்றை இன்னுமொரு நண்பர் அனுப்பியிருந்தார்.

கந்தையா தவராஜா என்ற அந்த நண்பரின் குறிப்பு இப்படி இருந்தது:

'சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழ் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட தொடாத, தொடத் தேவையற்ற விடயமாகக் கருதிய விடயத்தை-

தமிழ் தேசியவாதிகளால் துரோகிகள் எனக் கருதிய அரச சார்பு தமிழ் அமைச்சர்கள் எவரும் தொட விரும்பாத ஆனால், இன்றைய தமிழ் தேசியவாதிகள் முக்கியம் எனக்கருதும் முக்கியத்துவம் வாய்ந்த உரையாக இந்த உரை கருதப்படுகின்றது. இலங்கை இராணுவம், பொலிஸ் என்பன அரசால் புறக்கணிக்கப்படுகிறது அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் செய்துகொடுங்கள் என்று சிங்கள அரசுக்கு உத்தரவிட எந்தக் கொம்பன் எங்களில் உள்ளான்...'.

இதுவே அந்த பதிவு.

இதுவல்ல இன்று நாம் சொல்ல வந்தது.

மாவீரர் நாள் இந்த வருடம் மிக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவிட்டது. வழக்கத்திற்கும் அதிகமாக இந்த ஆண்டு மக்கள் ஆங்காங்கே திரண்டு சென்று அஞ்சலி செலுத்தியிருக்கின்றனர். பொலிஸார் ஆங்காங்கே சில தடைகளை ஏற்படுத்தியதும் மக்கள் உணர்ச்சிவசப்பட உதவியிருக்கலாம்.

மக்கள் இந்த மாவீரர்களுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்த அதேவேளையில்தான் புலம்பெயர் நாடு ஒன்றில் இருந்து அந்த 'சம்பவமும்' அரங்கேறியிருக்கின்றது.

புலம்பெயர் நாடொன்றில் வாழும் ஒருவருக்கு 'மேக்கப்' போட்டு, கமராவுக்கு முன்னால் அமர்த்தி சிலர் நடத்திய கூத்து, ஒட்டுமொத்த தமிழர்களையும் கேவலப்பட வைத்திருக்கின்றது.

காசிஆனந்தன், நெடுமாறன், கௌதமன் என்று தமிழகத்திலிருந்து பிரபலங்களும் புலம்பெயர் மண்ணிலிருந்து சிலரும் பெரும் எடுப்பில் எதிர்பார்க்க வைத்த இந்த உரை, அந்த காணொலியைக் கண்டதும் காணாமல் போய்விட்டது.

எங்கே துவாரகா போல ஓர் ஆளைக் கொண்டுவந்து இவர் தான் துவாரகா என்று காட்டிவிடுவார்கள் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அதனைக் கூட சரியாகச் செய்ய முடியாத ஒரு கோஷ்டிதான் இதுவரை இத்தனை 'பில்டப்'புக்களை கொடுத்தது என்பது அந்த காணொலியைக் கண்டதும் அனைவருக்கும் தெரியவந்தது.

ஆனால், அது பிரபாகரனின் மகள் என்று உலகின் முன்னால் கொண்டு வந்தவர்கள், ஏதோ ஒருவகையில் புலிகள் இயக்கத்துடன் நெருக்கமாக இருந்தவர்கள்தான். விடுதலைப் புலிகள் இயக்கத்தை விமர்சிப்பவர்கள், அதிகம் ஏன் எமது எதிரிகள்கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒழுக்கத்தை என்றுமே குறைத்து மதிப்பிட்டவர்கள் அல்லர்.

யுத்த களத்தில் புலிகளோடு போரிட்ட ஒரு படையணியின் தளபதியாக இருந்தவரும் இன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கமல் குணரட்ணகூட, யுத்தம் தொடர்பான தனது நூலில் புலிகள் பற்றியும் அதன் தலைவர் பிரபாகரன் பற்றியும் பல இடங்களில் விதந்து குறிப்பிட்டிருப்பார். பிரபாகரனின் ஏராளமான புகைப்படங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டபோதிலும் எந்த ஒரு புகைப்படத்திலும் மதுபோத்தல்களை தன்னால் காணமுடியவில்லை என்று அவர் வியந்திருப்பார்.

பிரபாகரனின் ஒழுக்கத்தில் எவருமே இதுவரை குறைகண்டது இல்லை.

'யாரோ ஒரு தாய்க்கு பிறந்த ஒரு பெண் பிள்ளையை அழைத்து வந்து இவர் பிரபாகரனின் புதல்வி என்று அறிமுகம் செய்துவைத்தது, அவரின் ஒழுக்கத்தின் மீதே கறைபூசும் முயற்சியாகவே தெரிகின்றது.' என்று ஒருவர் முகநூலில் எழுதியது எத்தனை யதார்த்தமானது.!

- ஊர்க்குருவி.

# 2 மதுபான நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கை மீண்டும் இடைநிறுத்தம்!

கொழும்பு, நவ. 29

இணக்கப்பாட்டுக்கமைய, வரி நிலுவையை செலுத்தாத காரணத்தினால் இரண்டு மதுபான நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகளை மதுவரி திணைக்களம் மீண்டும் இடைநிறுத்தியுள்ளது.

டபிள்யூ. எம். மெண்டிஸ் என்ட் கம்பனி மற்றும் ரந்தெனிகல டிஸ்டில்லரீஸ் ஆகிய நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகள் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மதுவரி திணைக்கள ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கமைய, கடந்த சனிக்கிழமைக்குள் நிலுவைத் தொகையில் ஒரு பகுதியை செலுத்துவதற்கு குறித்த நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்திருந்தன.

இதன்படி, குறித்த இரண்டு நிறுவனங்களும் தலா 213 மில்லியன் ரூபாயை செலுத்த ஒப்புக்கொண்டிருந்த நிலையில், 8 இலட்சம் ரூபாய் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஆடை மாற்றுவதை வீடியோ எடுத்தவர் கைது

கொழும்பு, நவ. 29

உடுகம மருத்துவமனையில் தாதி ஒருவர் ஓய்வறையில் ஆடை மாற்றும் போது அதை கைபேசியில் காணொலியாக பதிவு செய்த அதே மருத்துவமனையின் ஊழியர் ஒருவர் உடுகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் உடுகம மருத்துவமனையின் ஊழியராக கடமை புரியும் வலஹந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட தாதி குளியலறையில் ஆடை மாற்றும் போது காணொலி எடுக்கப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவரை உடுகம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுகாதார அமைச்சில் முறைகேடு; ஆராய மூன்று குழுக்கள் நியமனம்

கொழும்பு, நவ. 29

நாட்டிற்கு தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தல் உட்பட சுகாதார அமைச்சின் பல முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களம் மூன்று குழுக்களை நியமித்துள்ளது.

இது குறித்து முன்னாள் சுகாதார செயலாளர் உட்பட சுமார் 30 சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட செயல்முறை தொடர்பாக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள புலனாய்வுப் பிரிவினர், போலியான ஆவணங்களைத் தயாரித்து போலியான மருந்தை தயாரித்த நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்களிடமிருந்தும் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர். (அ)

# மத்திய வங்கி நாணய நிலவறையிலிருந்து ரூ. 50 இலட்சம் மாயமானதை ஏற்கின்றோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் சபையில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 29

மத்திய வங்கியின் 'நாணய வழங்கல் நிலவறையில்' இருந்து 50 இலட்சம் ரூபாய் காணாமல் போனமையை ஏற்றுக்கொள்கிறோம். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணை அறிக்கை வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மத்திய வங்கியின் 'நாணய வழங்கல் நிலவறையில் 'வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபாய் காணாமல் போனதை ஏற்றுக்கொள்கிறோம்.

இதற்கு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதற்காக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாகவும் மத்திய வங்கியின் உதவி ஆணையாளர் ஊடாகவும் உள்ளக மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் நிறைவில் தான் யார் 50 இலட்சத்தை கையகப்படுத்தியது என்பதை அறிய முடியும். அது தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

நாணய வழங்கல் நிலையறையில் பாதுகாப்பு கமெராக்கள் பொருத்தப்படவில்லை. அத்துடன், மத்திய வங்கியின் பாதுகாப்பு கமெரா கட்டமைப்பில் பதிவாகியுள்ள காட்சிகள் புலனாய்வு விசாரணை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய வங்கியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாணய வழங்கல் நிலவறையில் இருந்து நாணயத்தை எடுக்கும்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அத்துடன் 24 மணித்தியாலங்களும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

Eelanadu ஈழநாடு
29.11.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# மேய்ப்பர் இல்லாத ஆடுகள்

தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் குழப்ப நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. 2009இற்கு பின்னரான அரசியலில், தடியெடுத்தவர் எல்லாம் தண்டல்காரர்கள் - என்பது போல், அனைவருமே அரசியலை தீர்மனிப்பவர்களாகத் தங்களை முன்னிறுத்திக் கொள்கின்றனர். இது தொடர்பில் 'ஈழநாடு' ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கின்றது - அதாவது, ஒரு சமூகம் தலைமையற்று இருக்கின்றபோது அந்த சமூகத்தின் அரசியல் பரிகசிப்புக்குரியதாகவே காட்சியளிக்கும். ஈழத் தமிழர் அரசியல் அரங்கில் அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கின்றது.

2009இற்கு பின்னரான அரசியல் சீரழிவுகள் அனைத்துமே விடுதலை புலிகளின் பெயராலேயே முன்னெடுக்கப்படுவதுதான் துரதிர்ஷ்டவசமானது. ஈழத் தமிழர் அரசியலுக்கு புலம்பெயர் சமூகம் பலம் சேர்க்கும் - அவர்கள் ஈழத் தமிழர்களுக்கான சர்வதேச முகமாக இருப்பார்கள் என்றவாறான எதிர்பார்ப்பே ஆரம்பத்தில் அனைவரிடமும் இருந்தது. ஆனால், இன்று நிலைமைகளை ஆழமாக நோக்கினால், தமிழ் புலம்பெயர் சமூகம் எதிர்மறையான தாக்கத்தை செலுத்துகின்றதா என்றே கேட்க வேண்டியிருக்கின்றது. புலம்பெயர் சூழலிலிருந்து அவ்வப்போது இறக்குமதி செய்யப்படும் விடயங்கள் ஈழ அரசியலை மேலும் சிதைக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு என்று ஒரு வலுவான தலைமைத்துவம் இல்லைமையே அனைத்து பிரச்னைகளுக்குமான அடிப்படையான காரணமாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் களநிலைமைகளுக்கு ஏற்ப சிந்திப்பதை விடுத்து புலம்பெயர் குழுக்களின் தாளங்களுக்கு ஏற்ப நடனமாடுபவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே தமிழ் நாட்டிலிருந்தும் புலம்பெயர் சூழலிலிருந்தும் ஈழ அரசியலை தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப கையாள முடிகின்றது. எதையும் பேசுவோம் - ஆனால், எங்களை எவரும் தடுக்க முடியாது என்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. வடக்கு கிழக்கு மக்களை பிரதிநித்துவம் செய்யும் அரசியல் தலைவர்கள் என்போர் இவ்வாறான விடயங்களுக்கு கண்டனம் தெரிவிப்பதை விடுத்து அதனை மௌனமாக ஆமோதிப்பவர்களாகவே இருக்கின்றனர். இதன் காரணமாகவே, குழப்பங்களை மேற்கொள்ள விரும்புவர்கள் தொடர்ந்தும் உற்சாகம் பெறுகின்றனர்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வசதியுள்ளவர்கள் தமிழ் தேசிய கதைகளுடன் தங்களை இணைத்துக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் வசதியான இடங்களை நோக்கிச் செல்வதைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றனர். உண்மையில், ஏழை மக்களுக்குத்தான் அரசியல் தீர்வு தேவை. தங்களின் எதிர்காலத்தை சிறந்ததாக மாற்றிக் கொள்வதற்காகத்தானே ஒரு மக்கள் கூட்டத்துக்கு அதிகாரம் தேவைப்படுகின்றது. ஆனால், அதிகாரத்தை பெறுவதற்கான போராட்டங்கள் இறுதியில் அந்த மக்களை பழங்குடியாக்கிவிடும் என்றால் அந்த அதிகாரத்துக்கான அரசியல் நகர்வுகள் சரியான பாதையில் பயணிக்கவில்லை என்பதுதானே பொருள்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை பொறுத்தவரையில் பிரதான அரசியல் பிரச்னை ஒன்றே ஒன்றுதான் - அதாவது, அவர்கள் மேய்ப்பர் இல்லாத ஆடுகளாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே அவர்களை எவர் வேண்டுமனாலும் மேய்த்து விடலாம் என்னும் ஆபத்தான அரசியல் சூழலொன்று உருவாக்கியிருக்கின்றது. இந்த நிலைமை தொடர அனுமதித்தால் வடக்கு - கிழக்கில் வாழும் ஏழை தமிழ் மக்களுக்கு எதுவுமே எஞ்சப் போவதில்லை. ஆண்டுகள் தோறும் மாண்டவர்களை நினைத்து அழுதுவிட்டுப் போவது மட்டுமே மிஞ்சலாம். அழுது புலம்புவதற்கு அதிகாரம் எதற்கு?

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

“குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.”

**- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி)**



# ரொஷான் நீக்கம் பிரதமர் விளக்கம்

கொழும்பு, நவ. 29

ரொஷான் ரணசிங்க விளையாட்டுத்துறை மற்றும் நீர்ப்பாசன அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமைக்கான காரணத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று தெளிவுபடுத்தினார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் குணவர்த்தன, அமைச்சரவை ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டும் என்றும், அந்த ஒழுக்கத்தை பின்பற்றுவது அமைச்சரவை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினரின் பொறுப்பு என்றும் கூறினார்.

மேலும், அரசின் கொள்கையை கடைப் பிடிக்க விரும்பாதவர்கள் வெளியேறலாம். இல்லையெனில் அவர்கள் நீக்கப்படுவார்கள் அல்லது பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

“நல்லாட்சி அரசாங்கத்தின் போது, ஒரு சட்டமூலத்தை முன்மொழிந்த பாராளுமன்ற உறுப்பினர் இறுதியில் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தார். இது கடந்த காலத்தில் நடந்ததால், அதையே செய்யலாம் என்று நினைக்கும் சிலர் இங்கு உள்ளனர். அத்தகைய நடவடிக்கைகள் இப்போது நடைபெறாது” என்றார். (அ)

# அங்கீகாரம் கோரி ஹரீன் மனு தாக்கல்

கொழும்பு, நவ. 29

தன்னை விளையாட்டுத்துறை அமைச்சராக அங்கீகரிக்கக் கோரி, புதிதாக நியமிக்கப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழு மீது ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன, தனது கட்சிக்காரரை புதிய விளையாட்டு அமைச்சராக அங்கீகரிக்குமாறு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# 'யாழில் மலையகத்தை உணர்வோம்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ. 29

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நடத்தும் 'யாழில் மலையகத்தை உணர்வோம்' எனும் கருப்பொருளிலான பெரு நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

நாலை முதல் டிசெம்பர் 3ஆம் திகதி வரை காலை 9.00மணி முதல் 6.00மணி வரை இடம்பெறும் நிகழ்வானது மலையக மக்களின் வாழ்வு, சவால்கள், அடைவுகள் மற்றும் நிலைமை என்பவற்றை பிரதிபலிக்கும் நடமாடும் அருங்காட்சியகம், கண்காட்சி, கலை நிகழ்வுகள், ஆவண திரையிடல், அரசியல் - புலமை பகிர்வு மற்றும் ஆற்றுகை நிகழ்வுகளில் மலையகத்தின் 200 வருட கால வரலாற்றுப் பயணத்தை உணர்ந்து கொள்ளவும் மலையக மக்கள் எதிர்பார்க்கும் அடைவுகளை பெற உணர்வு ரீதியாக ஆதரவளிக்கும் வகையில் இடம்பெறவுள்ளது. (அ)

# துப்பாக்கிகளுடன் புல்மோட்டையில் ஒருவர் கைது


திருமலை, நவ. 29

திருகோணமலை - புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவர் புல்மோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை - புல்மோட்டை பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய நபராவார்.

புல்மோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் கனிவாகப் பழகுங்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும்.

**சிம்மம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**கன்னி**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும்நாள்.

**துலாம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

# எம்.ஜி.ஆர். நினைவு நாளில் கருணாநிதிக்கு விழாவா?



சென்னை, நவ. 29

**“அமைச்சர் துரைமுருகன் மீதான புகார்களுக்கு ஆதாரம் உள்ளது என, குடியாத்தம் குமரன் கூறுகிறார். அமலாக்கத்துறை இதை சும்மாவிடக்கூடாது. குடியாத்தம் குமரனை விசாரிக்க வேண்டும்,'' என, முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

அமைச்சர் துரைமுருகன் மீதான புகார்களுக்கு ஆதாரங்கள் உள்ளது என, குடியாத்தம் குமரன் கூறுகிறார். அமலாக்கத்துறை இதை சும்மாவிடக்கூடாது. குடியாத்தம் குமரனை விசாரிக்க வேண்டும்.

மக்கள் போக்குவரத்துக்கு போதுமான பஸ்கள் இல்லாமல் வெகுவாக சிரமப்படுகின்றனர். அ.தி.மு.க., ஆட்சியில் அதிகமான பஸ்களை வாங்கினோம். தி.மு.க., ஆட்சியில் ஒரு பஸ் கூட வாங்கவில்லை. அரசு, போதுமான அளவுக்கு பஸ்களை வாங்கி, அதிக பஸ்களை இயக்கினால் இந்த பிரச்னை வந்திருக்காது.

ஆவின் பால் விவகாரத்தில், விரைவில் தமிழக மக்கள் இந்த அரசுக்கு பால் ஊற்றி விடுவர். கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னையில் கார் பந்தயம் நடத்துகின்றனர். ஆசிரியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற பணம் இல்லை.

மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை என பல பிரச்னைகள் உள்ளது. ஆனால், கார் ரேஸ் நடத்த மட்டும் 42 கோடி ரூபாய் பணம் இருக்கிறதா? செவ்வாய் கிரகம் மாதிரி குண்டும், குழியுமாக சாலைகள் உள்ளது. ஆங்காங்கே பள்ளம் தோண்டி வைத்துள்ளனர்.

சாலை போட வக்கிலாத அரசு, மக்களுடைய வரி பணத்தை எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாமா?

எம்.ஜி.ஆரின் நினைவு நாளில் நடிகர் சங்கம் கருணாநிதிக்கு விழா எடுப்பது ஏன்? இது கண்டனத்துக்குரியது. தயாரிப்பாளர், நடிகர் சங்கத்தினர் இதை பரிசீலித்து வேறொரு நாளில் விழாவை எடுக்க முன்வர வேண்டும்-என்றார். (அ)

# தி. மு. க. கூட்டணி கட்சிகள் அதிமுக கூட்டணிக்கு வரும்

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தகவல்

சென்னை, நவ. 29

வரும் பாராளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் அதிமுக கூட்டணிக்கு வரும்என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினமான டிசெம்பர் 5ஆம் திகதி, மெரினா கடற்கரையில் ஜெயலலிதா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த அனுமதியும், பாதுகாப்பும் அளிக்கக் கோரி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று அவர் மனு அளித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் 69 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்தவர் ஜெயலலிதாதான். அதனால்தான் சமூகநீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தை தி.க தலைவர் கி.வீரமணி, ஜெயலலிதாவுக்கு வழங்கி பாராட்டினார்.

பொது தொகுதியில் ஆதிதிராவிட சமூகத்தினரை நிற்க வைத்தவர் ஜெயலலிதாதான். சமூக நீதியை நிலை நாட்டியவரும் அவர்தான். ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக நீதி பற்றி பேசி வருகிறார். செயலில் காட்டமாட்டார். திமுகவில் கனிமொழிக்கு அங்கீகாரம் கொடுக்கவில்லை. அவர்களது குடும்பத்திலும் பெண்களுக்கு சமூக நீதி, சமத்துவம் இல்லை. சொத்து வரி, மின்சார கட்டணம் உயர்வு, பால் விலை உயர்வு என தமிழக மக்கள் அவதியடைந்து வருகின்றனர். தமிழ்நாட்டு மக்களைஏமாற்றும் செயலில்தான் திமுக அரசு ஈடுபட்டுள்ளது.

வரும் பாரளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் அதிமுக வெற்றிபெறும். வரும் தேர்தலில் அதிமுக தலைமையில் மெகா கூட்டணி அமையும். திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் அதிமுக கூட்டணிக்கு வரும். திமுகதான் அமலாக்கத் துறை, சிபிஐயை பார்த்து பயப்பட வேண்டும். நாங்கள் பயப்படவேண்டிய தேவை இல்லை. தமிழகத்தில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த தமிழக அரசு தவறிவிட்டது-என்றார். (அ)

# “மன்னிப்பு கேட்க மாட்டேன்”

சென்னை, நவ. 29

போராட்டம் முடிந்து காங்கிரஸர் சென்றதும் குஷ்பு வீட்டில் இருந்து வெளியே வந்து அங்கிருந்த நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அவர் கூறியதாவது:-

என் வீட்டு வாசலில் வந்து போராட்டம் நடத்தினால் இரண்டு நாட்கள் விளம்பரம் கிடைக்கும் என்று நினைத்து போராடி இருக்கிறார்கள். இப்படியாவது காங்கிரஸ் கட்சிக்கு ஒரு விளம்பரம் கிடைக்கிறதே வாழ்த்துக்கள்.

நான் 1986 இல் தமிழ்நாட்டுக்கு வந்தேன். இந்த மண் என் சொந்த மண். மானமுள்ள, வீரமுள்ள தமிழச்சியாக தைரியமாக வாழ்ந்து வருகிறேன். என் கருத்தில் நான் பின் வாங்க மாட்டேன். நான் தவறாக எந்த கருத்தும் சொல்லவில்லை. சேரி என்பதற்கு என்ன அர்த்தம். முதலில் அதை சொல்லணும்.

எனக்கு எல்லா மக்களும் ஒன்றுதான். சாதி, மதம் பார்ப்பவள் நான் அல்ல. எல்லோரிடமும் சரி சமமாக பழகுவேன். எல்லோருடனும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் பழக்கம் கொண்டவள்.

ஒரு பெண் என்றும் பார்க்காமல் என்னை பொதுமேடையில் தி.மு.க.வினர் அவமானப்படுத்தியபோது இவர்கள் யாரும் பெண்களுக்கு ஆதரவாக பொங்கவில்லையே ஏன்?

தலித்துகளுக்கு ஆதரவு என்கிறார்கள். நேற்று கோவையில் இரும்பு கம்பியால் தலித்துகளை தாக்கி இருக்கிறார்கள். அவர்கள் வீட்டு வாசலில் சென்று ஏன் போராடவில்லை. விளம்பரம் கிடைக்காது என்ற தயக்கமா? என்னை பொறுத்த வரை தவறு செய்தால் குழந்தையிடம் கூட மன்னிப்பு கேட்பேன். தவறு செய்யாவிட்டால் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் மன்னிப்பு கேட்க மாட்டேன். அப்படி எதிர்பார்த்தால் ஏமாந்து போவார்கள்-என்றார். (அ)

# நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்கை அரிசி தட்டுப்பாடு

## 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, நவ. 29

**கீரி சம்பாவுக்கு இணையான 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

இந்த அரிசி கையிருப்பின் மூலம் அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்தி அரிசி தட்டுப்பாட்டை நீக்க முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்று முன் தினம் காலை நடைபெற்ற கண்காட்சியின்போது, கீரிச் சம்பா தட்டுப்பாடு குறித்து அமைச்சரிடம் பொதுமக்கள் கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்குப் பதிலளித்த அமைச்சர், எதிர்வரும் டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு குறிப்பிட்ட அரிசி வியாபாரிகள் கீரிச் சம்பா மற்றும் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை. நாட்டில் போதுமான அளவு அரிசி மற்றும் நெல் இருப்பு உள்ளது. நெல் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் சில விவசாயிகள் நெல் இருப்பு வைத்துள்ளனர்.

நாட்டில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை. கடந்த



பருவத்தில் 07 வீதமான நெற் செய்கை நிலத்தில் கீரி சம்பா பயிரிடப்பட்டது. 5000 மெற்றிக் தொன் அறுவடை கிடைத்தது. ஆனால் கையிருப்பை பாதுகாக்கவும் பராமரிக்கவும் அரசாங்கம் தவறியதன் காரணமாக சில அரிசி ஆலை உரிமையாளர்கள் கீரி சம்பாவின் விலையை அதிகரிப்பதற்காக நாட்டில் செயற்கை அரிசி தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்- என்றார்.

(அ)

# கிரிக்கெட்டை தூய்மைப்படுத்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

கொழும்பு, நவ. 29

நாட்டில் கிரிக்கெட் விளையாட்டைத் தூய்மைப்படுத்த தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் புதிய விளையாட்டுத்துறை அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் ஹரின் பெர்னாண்டோ ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கிரிக்கெட் விளையாட்டை தூய்மைப்படுத்த தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதனை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த பொறுப்பு மிகவும் முக்கியமான பொறுப்பு, ஏனென்றால் இந்த நேரத்தில் விளையாட்டு என்பது நாம் அனைவரும் விரும்பும் ஒன்றாகும். அதே நேரத்தில், இந்த விதிகளை மாற்றும்போது பல நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

எவருக்கும் எதிராகச் செல்ல வேண்டும் நான் எதிர்பார்க்கவில்லை. உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க உட்பட அனைவரின் உதவியுடன் மீண்டும் கிரிக்கெட் விளையாட்டை சுத்தப்படுத்த விரும்புகின்றேன்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப ஐசிசி தடையை விரைவில் மாற்றியமைப்பது மிகவும் அவசியமாகும்-என்றார்.

(அ)

# புதிய கலப்பின கரும்பு மூலம் சீனி தயாரிப்பதற்குத் திட்டம்

கொழும்பு, நவ. 29

எதிர்காலத்தில் உள்ளூர் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய புதிய கலப்பின கரும்பு வகைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சீனி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கரும்பு செய்கை நிலத்தின் அளவை அதிகரித்து உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சீனி நிறுவனத்தின் செயற்பாட்டு அதிகாரி கலும் பிரியங்கர தெரிவித்தார்.

செவனகல, பல்வத்த உள்ளிட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான நான்கு சீனி தொழிற்சாலைகள் தற்போது நாட்டின் சீனி தேவையில் இருபது வீதத்தை மாத்திரமே உற்பத்தி செய்வதாகவும் மீதி எண்பது வீதம் வருடாந்தம் நாட்டிற்கு இறக்குமதி



செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மத்திய வங்கியின் தரவுகளின்படி, கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் வருடாந்த சர்க்கரை உற்பத்தி 2.1 வீதத்தால் குறைந்துள்ளதுடன், 2019 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூர் சீனி உற்பத்தியில் தொடர்ச்சியான உயர்விற்கான போக்கு காணப்பட்ட போதிலும், சீனி உற்பத்தியில் சில வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.

(அ)

# ஜனாதிபதியின் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் வெளியேறலாம்

## அமைச்சர் சாமர சம்பத் கூறுகிறார்

கொழும்பு, நவ. 29

ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அவர் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதை விடுத்து அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்வதற்கு எவருக்கும் உரிமை உள்ளது. முரண்பட்டுக்கொண்டு அமைச்சரவைக்குள் இருப்பதைவிட ஒதுங்கிக்கொள்வதே நல்லது என ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி



லேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு மாத காலமாக கிரிக்கெட்டின் பெயரை வைத்து அரசாங்கத்தை விமர்சிக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதே சிலரது தேவையாக உள்ளது. ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை என்று கூறிக்கொண்டு அரசாங்கத்திற்குள் தொங்கிக்கொண்டு அவர்கள் இருக்கின்றனர். நாங்கள் யாரையும் பிடித்து வைத்துக்கொண்டில்லை. விரும்பியவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொள்ளலாம்.

அத்துடன் அடுத்த வருடம் தேர்தலுக்கான குறித்த காலம் வரை இந்த அரசாங்கமே தொடரும். அந்த வகையில் ஜனாதிபதியை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் எவருக்கும் அதற்கான வாய்ப்பை வழங்க முடியாது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் விலகிச் செல்ல முடியும். அமைச்சரவையில் முரண்பட்டுக்கொண்டு இருக்க முடியாது.

அவ்வாறு இருக்க முடியாதவர்கள் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ள அரசாங்கத்தில் பலர் இருக்கின்றனர்-என்றார்.

(அ)

# ரொஷான் ரணசிங்கவிடம் ரணில் இரண்டு கேள்விகளை கேட்டாராம்!

கொழும்பு, நவ. 29

விளையாட்டு அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக இருந்த ரொஷான் ரணசிங்கவை பதவி நீக்கி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அவர் வகித்த அமைச்சு பதவிகள், ஹரின் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் ஊழல் அமைப்பை சீர் செய்ய ரொஷான் ரணசிங்க தீவிர முயற்சியெடுக்க, இது ஜனாதிபதியுடனான முரண்பாடாக மாறியது.

இதன் தொடர்ச்சியாகவே அவர் பதவிநீக்கப்பட்டார்.

இந்த பின்னணியில், அவரிடம் எழுப்பப்பட்ட இரண்டு கேள்விகளுக்கு உரிய பதில் கிடைக்காத காரணத்தினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிடம் பதவி நீக்கம் செய்வதற்கான கடிதத்தை கையளித்ததாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் வழியாக வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தின் குழு மண்டபம் 3 இல் அமைச்சரவை அமைச்சர்கள் கூட்டத்திற்கு ஜனாதிபதி தலைமை தாங்கி இந்த கடிதத்தை அங்கு கையளித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட காலத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் அமைச்சரவைக் கூட்டத்தை நேற்று முன் தினம் மாலை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடத்துவதற்கு ஜனாதிபதி விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் மாலை நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்திற்கு வந்தவுடன் ஜனாதிபதி ரணசிங்கவிடம் இரண்டு கேள்விகளை முன்வைத்துள்ளார்.

கிரிக்கெட் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் கலந்துரையாடுவதற்கு அமைச்சரவை ஏற்கனவே உப குழுவொன்றை நியமித்த போதும், எதிர்க்கட்சி எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு சென்றதுடன், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோருடன் கிரிக்கெட் நெருக்கடியை தீர்க்க இந்திய தூதுவர் அலுவலகம் ஊடாக இந்திய கிரிக்கெட் சபையுடன் ஏன் பேசினார் என ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

மகாவலி காணி பகிர்வு அமைச்சராக தாம் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தில் முன்மொழியப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏன் அவரது அரசியல் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்பது ஜனாதிபதி எழுப்பிய இரண்டாவது கேள்வி.

ஜனாதிபதி தம்மிடம் எழுப்பிய இரண்டு கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளிக்காத காரணத்தினால் அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள ஐக்கியத்தை சீர்குலைத்துள்ளதாக சுட்டிக்காட்டி அமைச்சரை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கான கடிதத்தை ஜனாதிபதி கையளித்துள்ளார் என செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் ஒருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முதல் நிகழ்வாக இது வரலாற்றில் இடம்பெறும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(அ)

# 100 வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயநிலை!

**ஆராய்வதற்குக் குழு நியமனம்**

கொழும்பு, நவ. 29

**நாடளாவியரீதியில் சுமார் 40 அரச வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.**

**மேலும் 100 வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

குறித்த வைத்தியசாலைகளுக்கு அவசியமான வைத்திய உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்தல், சிகிச்சை செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டுவருதல் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த விசேட குழுவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

வட மாகாணம் மற்றும் புத்தளம், நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் வைத்தியர்கள் இன்மையால் வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் காணப்படுவதாக சுகாதார



அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வைத்தியர்கள் வெளிநாடு செல்கின்றமை, ஓய்வு பெறுகின்றமை, இடமாற்றம் பெறுகின்றமை, சேவையை விட்டு விலகுதல் உள்ளிட்ட காரணங்களினால் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தோணிக்கல் தம்பதி கொலை; பிரதான சூத்திரதாரி சிக்கினார்

வவுனியா, நவ. 29

வவுனியா தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள் விழா நடத்தப்பட்ட வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தி தம்பதியரை கொலை செய்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி குறித்த பிரதேசத்திலிருந்து மறைந்திருந்த நிலையில் பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் முன்னர் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்கள் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பிரதான சூத்திரதாரி உட்பட மேலும் மூவரை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து அவர்கள் மூவருக்கும் வெளிநாடு செல்ல தடை விதித்தும், அவர்களை கண்ட இடத்தில் கைது செய்யுமாறும் நீதிமன்றில் இருந்து பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், பிறந்தநாள் விழா நடந்த வீட்டுக்கு வேறு பிரதேசத்தில் இருந்து வந்து தம்பதியை கொலை செய்ய இரண்டு கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் பெற்றதாகவும், அதில் 25 இலட்சம் ரூபாய் முன்பணமாக பெறப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், குறித்த தாக்குதல் மூலம் உயிரிழந்த பெண்ணுக்கும் மற்றுமொரு நபருக்கும், உயிரிழந்த ஆணுடன் மற்றொரு பெண்ணுக்கும் உள்ள திருமணத்துக்கு புறம்பான தொடர்பு காரணமாக கொலை ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

(அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்தில் பெண் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 29

கொட்டாவ-அத்துருகிரிய நெடுஞ்சாலைக்கு இடையில் 03 கிலோமீற்றர் தூணுக்கு அருகில் ஒரு லொறியின் பின்னால் மற்றுமொரு லொறி வந்து மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தின் பின்னால் வந்த லொறியின் சாரதி மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்துள்ளதுடன், பெண் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

அம்பிலிபிட்டிய, செவனகல, கோவுலராற பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடுவெல அதிவேக நெடுஞ்சாலையின் எம்பிலிப்பிட்டிய நுழைவாயிலுக்கு அருகில் அவர் இந்த லொறியில் ஏறியுள்ளார்.

கடுவெலயிலிருந்து கொட்டாவ நோக்கி பயணித்த லொறி, அதுருகிரியவின் 03 கிலோமீற்றர் தூணுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு லொறியின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (அ)

# 2,000 மெற்றிக் தொன் சீனி கையகப்படுத்தப்பட்டது

கொழும்பு, நவ. 29

அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள 2,000 மெட்ரிக் டன் சீனியை, சதொச மற்றும் சிறப்பங்காடிகள் ஊடாக நுகர்வோருக்கு விற்பனை செய்துவருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

25 சதம் வரியில் இறக்குமதி செய்யப்பட்ட சீனி அரசாங்கம் கையகப்படுத்தி 275 ரூபாய் என்ற சில்லறை விலையில் நுகர்வோருக்கு வழங்கப்படுவதாக வர்த்தக வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ அண்மையில் அறிவித்திருந்தார்.

இதன்படி, நுகர்வோர் விவகார அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தைக்கு விநியோகிக்காமல் வைக்கப்பட்டிருந்த குறித்த 2ஆயிரம் மெற்றிக் தொன் சீனி கையிருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காகவும், தட்டுப்பாடு இன்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை இந்த விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

(அ)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு!

**சீன அரசின் உதவியுடன்**

கொழும்பு, நவ. 29

சீன அரசின் உதவியுடன் குறைந்த வருமானம் பெறுபவர்கள், படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 1,996 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், சீன அரசாங்கத்தின் சார்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷென்ஹோங்வும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் உள்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படவுள்ளன.

இதன்படி, பேலியகொடை பகுதியில் 615 வீடுகளும், தெமட்டகொடை பகுதியில் 586 வீடுகளும், மொறட்டுவை பகுதியில் 575 வீடுகளும், மஹரகம பகுதியில் 112 வீடுகளும், கொட்டாவ பகுதியில் 108 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவற்றில் கொட்டாவ பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள 108 வீடுகள் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக ஒதுக்கப்படவுள்ளன.

இந்த திட்டத்திற்காக சீன அரசாங்கம் 24.48 பில்லியன் ரூபாய் நிதியுதவி அளிக்கிறது.

இந்த வீடுகளின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (அ)

# தனிநபர் கடன் சுமை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 29

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிடைந்துள்ளமை யினாலேயே, நாட்டில் தனிநபர் கடன் சுமை உயர்வடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பகுதியில் ஊடக சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி 45 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இது தனிநபர் கடன் சுமை அதிகரிப்புக்கு 90 சதவீதம் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# சிதன்கேணி இளைஞன் மரண விவகாரம்: யாழ்.நீதிமன்றத்தில் ஐந்து பேர் சாட்சியம்!

யாழ்ப்பாணம், நவ. 29

வட்டுக்கோட்டை இளைஞன் கொலை வழக்கில் உயிரிழந்த இளைஞனின் சகோதரன், தந்தை, இளைஞனை பொலி ஸார் கைது செய்யும் போது, நேரில் கண்ட இளைஞன் உள்ளிட்ட ஐவர் யாழ்.நீதவான் நீதிமன்றில் தோன்றி தமது சாட்சியங்களை பதிவு செய்தனர்.

சாட்சி பதிவுகளை அடுத்து வழக்கினை எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டார்.

அதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், வழக்கின் மூன்றாவது சாட்சியத்தின் அடிப்படையில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நால்வரை மாத்திரமே கைது செய்துள்ளனர். ஏன் மற்றையவரை கைது செய்யவில்லை என்று மன்றில் கேள்வி எழுப்பினர்.

அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து மற்றைய நபரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

(அ)

# பஸ் நடத்துநர் மீது தாக்குதல் சந்தேகநபர்கள் அடையாளம்

கொழும்பு, நவ. 29

இங்கிரிய நகரில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் நடத்துநர் ஒருவர் ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸை நிறுத்தி வைத்திருந்த வேளையில், இன்று பிற்பகல் உந்துருளியில் வந்த இருவர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் குறித்த நடத்துநர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும், தாக்குதலை நடத்திய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# இன்னும் 50 வருடங்களில் மன்னார் தீவு இருக்காது!

## வினோ நோகராதலிங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, நவ. 29**

**ஐம்பது வருடங்களில் மன்னார் தீவு காணாமல் போகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.**

**2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் சுற்றாடல் துறை மற்றும் வனஜீவராசிகள், வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு அல்லது கனிய மணல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அவுஸ்திரேலியாவின் டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் என்ற நிறுவனம் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்கிறது.

மன்னார் தீவு மக்களின் விருப்பத்துக்கு மாறாக, அவர்களின் எதிர்ப்பையும் மீறி இந்த கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான திட்டமிடல்கள் அரசு மற்றும் அரச நிறுவனங்களின் ஆதரவோடு டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் நிறுவனம் அதன் துணை நிறுவனங்களோடு சேர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. இதனால் மன்னார் மாவட்டம் ஒரு காலத்தில் முற்றாக கடலுக்குள் மூழ்கக் கூடிய அபாயம் உள்ளது.

மன்னார் மாவட்ட மக்கள் இந்த அகழ்வாராய்ச்சி பணியை நிறுத்தக்கோரி பாரிய ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் அரசு அபிவிருத்தி என்ற பெயரில் அல்லது அங்கே கனிய மணல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

ஆழ்துளை கிணறுகள் மூலமாக இந்த அகழ்வாராய்ச்சி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டாலும் அது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சுமார் 40 அடி ஆழத்தில் இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. பிற்காலத்தில் நிச்சயமாக நன்னீரும் கடல் நீரும் கலந்து குடிநீர் பிரச்சினை ஏற்படுவதற்கான நிலையை உருவாக்கும்.

இதனால் மன்னார் தீவு மக்கள் மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். அரசு எந்த வகையில் இதற்கான அனுமதியை வழங்கியது என்பதே எமது கேள்வி.

அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் ஊழல் மோசடியால் மன்னார் தீவு அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளது.

இன்னும் ஒரு 50 வருடங்களுக்கு பின்னர் மன்னார் தீவு இருக்காது. அப்படி ஒரு தீவு இருந்ததற்கான அடையாளங்களையே இல்லாமல் செய்கின்ற திட்டத்திற்கு இந்த சுற்று சூழல் அமைச்சும் அரசும் உடந்தையாக இருக்கின்றன.

அரச அதிகாரிகளும் அது அரசின் உத்தரவு, மேலிட உத்தரவு எனக் கூறிக்கொண்டு வாய் மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

இந்த திட்டங்களை மன்னார் தீவு மக்கள் விரும்பவில்லை. மீன் வளம் இல்லாது போகும் என மீனவர்கள் கூறுகின்றனர். எனவே இந்த அகழ்வாராய்ச்சி பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மன்னார் தீவு காப்பாற்றப்பட வேண்டும்-என்றார். (அ)

# ஆடைத் தொழிற்துறை ஆபத்தில்!

## பாதுகாக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

*கொழும்பு, நவ. 29*

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்காற்றிய ஆடைத் தொழிற்துறை அபத்தான நிலையில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் சுமார் 20 வீதமான பிரதான ஆடை வர்த்தக நிறுவனங்கள் மூடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் அமரர் ரணசிங்க பிரேமதாஸவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆடை வர்த்தக நிறுவனங்கள் ஆகியன இவ்வாறு அபாயகரமான நிலையை எதிர் கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

சுமார் 200 இருக்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளதாகவும், தொழிற்சாலைகள் வீழ்ச்சியடைவதால் கிராமத்தின் பொருளாதாரம் நலிவடைவதுடன், இளைஞர்களின்




வருமானம் இழக்கப்படும் எனவும் இலங்கையின் அந்நிய செலாவணி கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விலைவாசி அதிகரிப்பு காரணமாக ஆடைத் தொழிற்சாலைகளால் உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஆடைத் தொழிற்துறைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், உற்பத்திச் செலவுகளைக் குறைத்து அதிக தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் முதலீட்டாளர்கள் இலங்கையில் கைத்தொழில்களை ஆரம்பிப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் கைத்தொழில் நிறுவப்பட்ட காலத்தில் இருந்த சுதந்திரம் இன்று இழக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், நாட்டின் வருமானம் சரிவடைந்துள்ள நிலையில் மாற்று வருமானத்தை ஈட்டுவதற்கான அரசாங்கத்தின் திட்டம் என்ன எனவும் கேள்வி எழுப்பினார். (அ)

# இராகலையில் கைதான வர்த்தகர் நீர்கொழும்பு சிறையில் உயிரிழப்பு

*கொழும்பு, நவ. 29*

நீர்கொழும்பு பொலிஸாரால் இராகலை நகரில் கைது செய்து கொண்டு செல்லப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தன் உயிரை மாய்த்துக் கொண்டதாக சொல்லப்படும் சம்பவம் இராகலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராாலை மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோவிந்தசாமி கிருஷ்ணகுமார் (வயது 40) என்ற குடும்பஸ்தர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக இவரின் குடும்பத்தார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த குடும்பஸ்தரின் உடல் நீர்கொழும்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதணைக்காக வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ள உயிரிழந்தவரின் மனைவி வடிவேல் விஜயகௌரி, தனது கணவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக வைத்தியசாலையில் இடம்பெற்ற விசாரணையில் தெரிவித்தார்.

இராகலை தோட்டம் மத்தி பிரிவை சேர்ந்தவர் கோவிந்தசாமி கிருஷ்ணகுமார். இவர் சுமார் எட்டு வருடங்களாக இராகலை நகரில் ஹாட்வெயார் கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

இவர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் தனது கடைக்கு சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கடனாக பெற்றுள்ளார்.

இவர் பெற்ற கடனை செலுத்துவதில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் இவருக்கு எதிராக நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டு வர்த்தகருக்கு வழங்கப்படவேண்டிய கடன் பணம் தவணை முறையில் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

இருப்பினும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குக்கு வழக்காளியான கோ.கிருஸ்ணகுமார் இரண்டுமுறை ஆஜராகாத நிலையில் அவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நீர்கொழும்பு பொலிஸார் கடந்த வியாழன் அன்று இராகலை நகருக்கு கார் ஒன்றில் வருகை தந்து ஹாட்வெயார் வர்த்தகரான கிருஸ்ணகுமாரை கைது செய்து அவரை இராகலை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பின் இராகலை பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கிருஸ்ணகுமாரை வலப்பனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இவரை 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உந்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் பதுளை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த நிலையில் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை பதுளை சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்ட குடும்பத்தார் கிருஸ்ணகுமாருக்கு தேவையான பொருட்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இராகலை பொலிஸார் இருவர் கிருஸ்ணகுமாரின் வீட்டுக்கு வருகை தந்து கிருஷ்ணகுமார் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்து கொண்ட நிலையில் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தகவலை தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கிருஸ்ணகுமாரின் மனைவி விஜயகௌரி, மற்றும் கிருஸ்ணகுமாரின் சகோதரர்கள் இருவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அதிகாலை நீர்கொழும்புக்கு சென்று வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த கிருஸ்ணகுமாரின் உடலை பார்வையிட்டு அங்கு சம்பவம் தொடர்பாக மரண விசாரணைக்காக வருகை தந்திருந்த நீர்கொழும்பு மாவட்ட நீதவான் முன் அடையாளம் காண்பித்துள்ளனர்.

இதன்போது தனது கணவரின் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதாக கிருஸ்ணகுமாரின் மனைவி நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

இதை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்திற்கு பொலிஸார் விரைவாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர். (அ)

# இரட்டைப் பெண் குழந்தைகளை பிரசவித்த இளம் தாய் உயிரிழப்பு!

*யாழ்ப்பாணம், நவ. 29*

வடமராட்சி, தொண்டைமானாறு-வல்வை வீதியைச் சேர்ந்த இளம் தாய் இரட்டை பெண் குழந்தைகளை பிரசவித்த சில நாட்களில் உயிரிழந்த சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வருடம் திருமணம் செய்த குறித்த பெண் பிரசவத்திற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த சில தினங்களுக்கு முன் குறித்த பெண்ணுக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்ததாக தெரிக்கப்படுகின்றது. நல்ல உடல் நலத்துடன் தாயும் இரு குழந்தைகளும் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தாய் திடீரென உயிரிழந்தமை அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பாகமேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. சம்பவத்தில் தொண்டைமானாறு-வல்வை வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய நி.விதுஷா என்ற இளம் தாயே உயிரிழந்தார். (அ-02)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் உட்பட 3 பேர் கைது

மட்டக்களப்பு, நவ. 29

**மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கேற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டு. மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் மற்றும் கொடிகளை வாகனத்தில் எடுத்துச் சென்றவர்கள் உட்பட 3 பேரை நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தை அலங்கரிப்பதற்காக மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் பொருட்களை நேற்று மாலை எடுத்துச் சென்ற நிலையில் அந்த பகுதியில் நடமாடும் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டபோது, அதில் சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகள், கம்பிகள் இருப்பதை கண்டு வாகனச் சாரதியை கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) அவரது மகன் ஆகியோர் பொலிஸ் நிலையம் சென்று கைது செய்யப்பட்ட சாரதியை பார்த்துவிட்டு மாலை 6.05 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் மாவீரர்களுக்கு விளக்கேற்றய தையடுத்து அவர்கள் 2 பேரையும் கைது செய்தனர். (அ)

# போதைப்பொருளுடன் சிக்கிய பொலிஸார்!

மட்டக்களப்பு, நவ. 29

25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் வவுனியாவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவல லொன்றையடுத்து புதிய காத்தான்குடி கர்பலா பகுதிகளில் வைத்தே ஐஸ் போதை பொருளுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மாணவர்களுக்கு ஐஸ் விநியோகித்தவர் கைது

மட்டகளப்பு, நவ. 29

நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப் பொருள் உட்பட பல்வேறு போதைப் பொருட்களை விநியோகித்து வந்த ஒருவரை பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்துள்ளனர்.

பெரியநிலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை 43 வயதுடைய போதைப்பொருள் வியாபாரி சந்தேகத்திற்கிடமாக நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து குறித்த போதைப்பொருளை விநியோகித்துள்ளதுடன் அவரிடமிருந்து ஒரு தொகை ஐஸ் போதைப் பொருளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# உள்ளூர் உற்பத்தி பொருட்கள் விற்பனையும் கண்காட்சியும்

காரைதீவு, நவ. 29

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வானது நேற்று



கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

இது சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வின் போது பிரதேச செயலக பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட பொருட்கள் (தைத்த ஆடைகள், உள்ளூர் மரக்கறிகள், உணவு வகைகள், மரக்கன்றுகள், பாதணிகள், கைப்பணிப்பொருட்கள், மரத்தினாலான கைவினை பொருட்கள், பனையோலை பொருட்கள், கைத்தறி) காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்திய கௌரி தரணிதரன், கணக்காளர் ரி. விக்னராஜா, நிர்வாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு பொருட்களை கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதிகளில் மிளகாய் செய்கை!



காரைதீவு, நவ. 29

பொதிகளில் மிளகாய்ச் செய்கை செய்யும் முறைமையை ஊக்குவிக்கும் வகையில் காரைதீவு விவசாய போதனாசிரியர் பிரிவில் கூட்டு விளம்பர நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

காரைதீவு விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் தொழில் நுட்ப உதவியாளர் திருமதி எஸ்.நிலக்க்ஷியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன், கௌரவ அதிதியாக விவசாய போதனாசிரியர் ஜே.எம். பாஸில் ஆகியோர் கலந்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் பேசுகையில்-

பொதிப் பயிர் செய்கையானது நிலம் அற்றவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எமது பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளம் கடும் வறட்சி என்பவற்றால் மாறி மாறி வரும் அனர்த்தங்களால் பயிர் செய்கை பாதிக்கப்படுகிறது. இத்தகைய பாதிப்பை குறைக்கும் வகையிலும் நிலமில்லாத பிரச்சினை தீர்க்கும் வகையிலும் இப் பொதிப் பயிர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

குறிப்பாக நகர மாடி வீடுகளுக்கு ஏற்ற முறையாகவுமுள்ளது.

எனவே விவசாயிகள் இத்தகைய புதிய முறைகளையும் பின்பற்றி வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# கல்முனை நகர லயன்ஸ் கழக வெள்ளிவிழா வேலைத்திட்டம்

அம்பாறை, நவ. 29

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா வேலைத்திட்டம் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் லயன்.எம்.சுதர்சன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முதல் நிகழ்வாக, திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய காயத்ரி கிராமத்தில் ஐம்பது பேருக்கு 25சாறிகள் மற்றும் 25 சாரங்கள் வழங்கப்பட்டன.

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழா தலைவர் பொறியியலாளர் லயன். எம். சுதர்சன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளர் லயன் கலாநிதி எம். கோபாலரெத்தினம், சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்



பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

மேலும், கழக செயலாளர் லயன் எ.எல்.எம்.பாயிஸ், பொருளாளர் லயன் எம்.பரமேஸ்வரநாதன் உள்ளிட்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

காயத்ரி கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். சடாட்சரன் நன்றியுரை வழங்கினார். (அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் இடையே நீடிக்கிறது போர் நிறுத்தம்!

ஜெருசலேம், நவ. 29

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

**கட்டாரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்தம் மேலும் 2 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக கட்டார் நேற்று முன் தினம் அறிவித்தது.**

**இந்த போர் நிறுத்தத்தின் காரணமாக ஹமாஸ் அதிகமான பணயக் கைதிகளை விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**



இதுவரையில் ஹமாஸ் 69 பணயக் கைதிகளை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 24 ஆம் திகதி முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த நிலையில், நேற்றைய தினம் மேலும் இரண்டு நாட்கள் போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பத்து பணயக் கைதிகளை விடுவிக்க கூடுதலாக ஒரு நாள் சண்டை நிறுத்தத்தை நீடிக்க விரும்புவதாக முன்னதாக இஸ்ரேல் கூறியிருந்தது.

இந்த நிலையில் "காஸா வட்டாரத்தில் மனிதாபிமான அடிப்படையில் மேலும் இரண்டு நாள் போரை நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது," என்று கட்டார் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் சமூக ஊடகமான எக்ஸ் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை ஹமாஸ் தரப்பினர் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் இஸ்ரேல் இதுவரையில் எவ்வித கருத்தும் தெரிவிக்காத நிலையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் பேச்சாளர் இரண்டு நாள் போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டதை உறுதி செய்துள்ளார். (அ)



# இஸ்ரேல் எண்ணெய் கப்பல் மீது ஏடன் வளைகுடாவில் தாக்குதல்!

## அமெரிக்க கப்பல் காப்பாற்றியது

நியூயோர்க், நவ. 29

ஏடன் வளைகுடாவில் தாக்குதலிற்குள்ளான இஸ்ரேலிய கப்பலை அமெரிக்க கடற்படை காப்பாற்றியுள்ளது.

அமெரிக்க இராணுவம் இதனை தெரிவித்துள்ளது.

ஏடன் வளைகுடாவில் சென்ரல்பார்க் என்ற எண்ணெய் கப்பல் அவசர அழைப்பை விடுத்து காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து யுஎஸ் எஸ் மசன் என்ற கப்பல் உதவிக்கு விரைந்துள்ளது.

இதன்போது ஆயுதமேந்திய ஐவர் கப்பலில் இருந்து தப்பிச் செல்ல முயன்றவேளை அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய எண்ணெய் கப்பலின் மாலுமிகள் பாதுகாப்பாக உள்ளனர் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பலை கைப்பற்ற முயன்றவர்கள் யார் என்பது குறித்து அமெரிக்கா எதனையும் தெரிவிக்கவில்லை எனினும் யேமனிலிருந்து ஏவுகணைகள் செலுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# புகைத்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கும் நியூசிலாந்து

வெலிங்டன், நவ. 29

புதிதாக பொறுப்பேற்றுள்ள நியூசிலாந்து அரசாங்கம், தமது நாட்டில் புகைத்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினை நீக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வரி வருமானத்தை அதிகரிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய ஜசிந்தா ஆர்டன் தலைமையிலான அரசாங்கம் அடுத்த வருடம் முதல், 2008 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனைக்கு தடை விதித்திருந்தது.

நியூசிலாந்தில் அதிகம் இறப்பு வீதம் புகைத்தலினாலேயே ஏற்படுவதனாலும், இளம் பராயத்தவர்களை புகைத்தலில் இருந்து தடுப்பதற்குமாகவே இந்த சட்டம் வரையப்பட்டது.

இந்தநிலையில் புதிய அரசாங்கம் இந்த சட்டத்தை மாற்ற தீர்மானித்துள்ளது.

இதற்கு மருத்துவ நிபுணர்கள் தமது கடுமையான ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

முந்தைய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட இந்த சட்ட மறுசீரமைப்பு சர்வதேச ரீதியாக பாராட்டுக்களை பெற்றிருந்தது.

# சீன, இந்திய குடிமக்கள் மலேசியா செல்வதற்கு வீசா தேவையில்லை

கோலாலம்பூர், நவ. 29

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 30 நாட்களுக்கு மலேசியாவுக்கு சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா இன்றி செல்ல அனுமதி வழக்கப்படும் என அந்நாட்டு பிரதமர் அன்வார் இப்ராஹிமின் அறிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மக்கள் நீதிக் கட்சி மாநாட்டில் ஒரு உரையின்போது இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

ஆனால் விசா எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்று கூறவில்லை.

மலேசியாவுக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் பட்டியலில் சீனாவும் இந்தியாவும் முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2019 ஆம் ஆண்டு கொரோனா தொற்று பரவலுக்கு முன்னர் மலேசியாவிற்கு சீனாவிலிருந்து 1.5 மில்லியன் பேரும் இந்தியாவில் இருந்து 354,486 பேரும் சென்றுள்ளனர்.

இதனுடன் ஒப்பிடுகையில், இவ் ஆண்டு ஜனவரி மாதம் மற்றும் ஜூன் மாதங்களுக்கிடையில் சீனாவிலிருந்து 498,540 பேரும் இந்தியாவில் இருந்து 283,885 பேரும் சென்றுள்ளார்கள்.

தாய்லாந்து சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவும், மந்தமான பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கும் இலவச விசா முறையை அமுல்படுத்தியுள்ளது. அதில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அடங்குகின்றன. அதனை தொடர்ந்து மலேசியாவும் அமுல்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மணப்பெண், குடும்பத்தை சுட்டு கொன்று தானும் தற்கொலை செய்தார் மணமகன்!





பாங்கொக், நவ. 29

தாய்லாந்தின் வடகிழக்கு மாகாணமான நகோன் ரட்சசிமாவில் நடந்த திருமண விழாவில், மணப்பெண்ணையும் குடும்பத்தினரையும் சுட்டுக் கொன்ற மணமகன், தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தாழ்வுச்சிக்கலால் இந்த பயங்கரம் நிகழ்ந்துள்ளது.

வாங் நாம் கியாவோ காவல் நிலையத்திற்கு துப்பாக்கிச் சூடு பற்றிய தகவல் கிடைத்ததும், சம்பவம் நடந்த வீட்டிற்கு பொலிஸார் விரைந்தனர். அங்கு வந்தபோது, உடைந்த கண்ணாடிகள், போத்தல்கள் மற்றும் நாற்காலிகள் மற்றும் மேசைகளை சேதப்படுத்திய நிலையில் ஒரு குழப்பமான நிகழ்வை பொலிஸார் அவதானித்தனர்.

ஜதுரோங் "ஜாக்" சூக்சூக் என்ற 29 வயது மணமகன், 38 வயது மணமகள் காஞ்சனா "பு" ஜான்டுக், 37 வயது மணமகளின் சகோதரி கோர்னிடா மேனேட்டர் மற்றும் 60 வயது மணமகளின் தாயார் கிங்தாங் கிளஜோர்ஹோர் உட்பட நான்கு உயிரற்ற உடல்களை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

50 வயதான தோங் நோன் குண்டோட் மற்றும் 28 வயதுடைய பாம்ரோங் சதாராட் உட்பட இருவர் சம்பவ இடத்திலேயே காயமடைந்தனர். இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், ஆனால் வழியிலேயே தாங் இறந்தார்.

ஜாக் மற்றும் பு தங்கள் வீட்டில் காலையில் ஒரு திருமண விழாவை நடத்தியதாகவும், கொண்டாட்டம் மாலை வரை தொடர்ந்ததாகவும் சாட்சிகள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சில விருந்தினர்கள் மற்றும் மணமகளின் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக மது அருந்திய போது, மணமக்களுக்கிடையில் பொறாமை காரணமாக கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. மணமகள் அழகாகவும் நட்பாகவும் இருந்ததால் ஒவ்வொரு விருந்தினருடனும் பேசி அவர்களுடன் குடித்து மகிழ்ந்ததாக சாட்சிகள் தெரிவித்தனர்.

மணமகன் 28 வயதானவர். ஒரு கால் ஊனமுற்றவர். அவர் தாய்லாந்துக்காக பரா ஒலிம்பிக் போட்டிகளிலும் கலந்து கொண்டிருக்கிறார்.

சில விருந்தினர்கள் மணமகளை விரும்புவதாக மணமகன் நினைத்தார். அவர், தான் ஊனமுற்றவர், அதனால் தன்னை விட பல வயது மூத்த மணமகளை திருமணம் செய்ய வேண்டியேற்பட்டதாக தாழ்வுச்சிக்கலுக்குள்ளாகியுள்ளார்.

மணமகன் குடிபோதையில் இருந்தார். மணமகள் ஒவ்வொரு விருந்தினரையும் வரவேற்றார். அவர் சகஜமாக பேசிப்பழகியது மணமகனுக்கு பிடிக்கவில்லை. கோபமடைந்தார்.

திடீரென வீட்டிற்கு வெளிப்பக்கமாக ஓடிச்சென்று, தனது காருக்குள்ளிருந்த துப்பாக்கியை எடுத்து வந்து மணமகளையும், அவரது தாய், சகோதரியையும் சுட்டுக்கொன்றார். அத்துடன், விருந்தினர்கள் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இறுதியில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்தார். கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதமான 9எம்எம் பிஸ்டல் ஜாக்கின் உடல் அருகே கண்டெடுக்கப்பட்டது.

ஜாக் சர்வதேச நீச்சல் மற்றும் துப்பாக்கி சுடுதல் போட்டிகளில் பங்கேற்ற முன்னாள் பாராலிம்பிக் தடகள வீரர்.. அவர் துப்பாக்கி சேகரிப்பாளராகவும் இருந்தார், ஆனால் அவரது துப்பாக்கி உரிமை சட்டபூர்வமானதா இல்லையா என்பதை அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

# அரச ஊழியர் சம்பள முயர்வு ஜனவரி முதல் வழங்கப்படும்!

## நிதி அமைச்சு நடவழக்கை



**கொழும்பு, நவ. 29**

**2024 ஏப்ரல் முதல் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்படவிருந்த வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவை ஜனவரி மாதம் முதலே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.**

இதன்படி 2024 ஜனவரி முதல் ஏப்ரல்வரை 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கான முயற்சி இடம்பெற்றுவருகின்றது எனவும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபாவையும் ஜனவரி முதலே வழங்குவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு வரவு-செலவுத் திட்டம் மூலம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு தற்போது 7 ஆயிரத்து 800 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக வழங்கப்படும் நிலையில், அடுத்த வருடம் முதல் 17 ஆயிரத்து 800 ரூபாவை வாழ்க்கைச்செலவு கொடுப்பனவாக பெறுவார்கள்.

2024 ஏப்ரல் மாத சம்பளத்தில் இருந்துதான் இந்த அதிகரிப்பு இடம்பெறும். எனவே, ஜனவரி முதல் மார்ச் வரையான நிலுவை கொடுப்பனவு 2024 ஒக்ரோபர் மாதத்தில் இருந்து தவணை அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் வழங்கப்படும் என பாதீட்டு உரையில் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

அதேவேளை , அரச ஓய்வூதியம் பெறுவோருக்கு தற்போது வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக மாதாந்தம் 3 ஆயிரத்து 525 ரூபா வழங்கப்படுகின்றது. அரச ஓய்வூதியதாரர்களின் மாதாந்த வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு 6 ஆயிரத்து 25 ரூபா வரை அதிகரிக்கப்படும். இந்த அதிகரிப்பு 2024 ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே ஜனவரி முதல் இதனை நடைமுறைப்படுத்த முயற்சி இடம்பெறுகின்றது. (அ)

# எம்.பி. பதவியை இழந்த நசீர் அஹமட் அரச வாகனங்கள் பயன்படுத்துகிறார்

கொழும்பு, நவ. 29

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த நசீர் அஹமட், சுற்றாடல் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் பயன்படுத்திய இரண்டு அதிசொகுசு ஜீப்களை மீளக் கையளிக்காது தனது தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தி வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

20 கோடி ரூபா பெறுமதியான இந்த இரண்டு வாகனங்களும் அரசாங்கத்தினால் அமைச்சருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களாகும்.

இவ்விரு வாகனங்களும் மீள ஒப்படைக்கப்படாதமை தொடர்பில் சுற்றாடல் அமைச்சு மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளது.

இது தொடர்பில் அவருக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு வாகனங்களும் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்படும் என பதிலளித்துள்ளார்.

ஆனால், இந்த வாகனங்கள் இதுவரை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 25 நிமிடம் லிப்ட்டுக்குள் சிக்கினார் அமைச்சர்!

கொழும்பு, நவ. 28

கண்டி மாவட்ட செயலகத்தில் மின்தூக்கியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான குணதிலக ராஜபக்ஷ மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் மின்தூக்கியினுள் சிக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் மூவரும் கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெரும் பிரயத்தனத்துடன் அவர்களை வெளியே அழைத்துச் சென்றனர். (அ)

# அவுக்கனை புத்தர் சிலைக்கு காவி உடை அணிவித்தமை குறித்து உரிய விசாரணை

கொழும்பு, நவ. 29

அனுராதபுரத்தில் அவுக்கனை புத்தர் சிலைக்கு காவி ஆடையை அணிவித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில் தொல்லியல் மதிப்புள்ள சிலையின் தற்போதைய தன்மையை மாற்றுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அவுக்கனை புத்தர் சிலை நாட்டிலுள்ள நிற்கும் புத்தர் சிலைகளில் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தாதுசேன மன்னன் இந்த சிலையை உருவாக்கியதாக வரலாறு கூறுகிறது.

சிலையில் அங்கியின் மடிப்புகள் தெளிவாகத் தெரிவதாலும், மிக நுணுக்கமாக செதுக்கப்பட்டிருப்பதாலும், இந்நாட்டின் கடந்த கால கலையின் தனித்துவத்தைக் காட்டும் வடிவமைப்பாக இது கருதப்படுகிறது.

மேலும் தொல்பொருள் மதிப்புடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்களால் வழிபடப்படும் அவுக்கனை புத்தர் சிலைக்கு ஆடை அணிவிக்கும் செயலில் ஒரு குழுவினர் ஈடுபட்டதை காட்டும் பல புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

சிலர் சிலையின் மேல் ஏறி அந்த ஆடையை அணிந்த விதமும் குறித்த புகைப்படங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புலம்பெயர் தொழிலாளர் நலத்திட்டங்களுக்கு அரச அதிகாரிகள் சிலர் ஆதரவளிக்கவில்லை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 29

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களுக்கு சில அரச அதிகாரிகள் ஆதரவளிக்கவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

மேலும், புலம்பெயர் தொழிலாளர்க ளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் போது, அவர் களுக்கு ஆதரவு கிடைக்க வில்லை. தடை இருந்தது. சில அதிகாரிகளுடன் சண்டை யிட்டு, அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம். அவர்களுக்கு வீட்டுக்கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள் ளோம்.

வங்கிகளுடன் கலந்துரையாடி அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று, குறைந்த வட்டியில் 5 பில்லியன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்கத் தயார் செய்தோம், ஆனால் திறைசேரி, மத்திய வங்கி மற்றும் ஏனைய வங்கிகளால் இன்னும் அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்க முடியவில்லை.

சுமார் 14 மாதங்களுக்கு முன்னர், புலம்பெயர் தொழிலாளர்ககள் அனுப்பும் பணத்திற்கு விமான நிலையத்தில் பொருட்கள் கொள்வனவின் போது சலுகைகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இது தொடர்பாக ஜனாதிபதி வர்த்தமானியை வெளியிட்டபோதும் எமது சுங்க அதிகாரிகளால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்க முடியவில்லை-என்றார். (அ)

# அரசியலமைப்புப் பேரவையின் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கும் ரணில்

## சட்டத்தரணிகள் சங்கம் கண்டிப்பு

கொழும்பு, நவ. 29

அரசியமைப்புப் பேரவையின் மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும் வகையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தைக் கடுமையாகக் கண்டிப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது.

இதன் மூலம் மக்களின் ஆணையின்றி ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவரின் எதேச்சதிகாரப்போக்கு படிப்படியாக மேலோங்கி வருவதை அவதானிக்க முடிவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் அரசியலமைப்புப் பேரவை மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பாராளுமன்றத்தில் கடந்த 23 ஆம் திகதி உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்புப் பேரவையானது நிறைவேற்றதிகாரத்தின்கீழ் வருவதாகக் கூறியதன் மூலம் அப்பேரவையின் நோக்கத்தை முற்றுமுழுதாகத் தவறாகப் பிரதிபலித்துள்ளார்.

ஜனாதிபதியினால் பகிரங்கமாக வெளியிடப்பட்ட மிக மோசமானதும், ஆபத்தானதுமான இக்கருத்து ஆட்சி நிர்வாகம் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் விதமாக அரசியலமைப்பின் ஊடாக நிறுவப்பட்ட கட்டமைப்பை வலுவிழக்கச்செய்கின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் நோக்கில் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புக்கான 18 ஆம் மற்றும் 20 ஆம் திருத்தங்களின் கீழ் அரசியலமைப்புப் பேரவை நீக்கப்பட்டது.

மீண்டும் அப்பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையகாலங்களில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் வெளியிடப்பட்ட கருத்துக்கள் உரிய எல்லைக்கோட்டைக் கடந்துள்ளன.

அதுமாத்திரமன்றி அரசியலமைப்புப் பேரவையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமித்திருப்பதானது, ஜனாதிபதியின் பரிந்துரைகளை ஏற்பதா? இல்லையா? என்ற தீர்மானத்தை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு அரசியலமைப்பின் ஊடாக ஆணை வழங்கப்பட்டிருக்கும் அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்.

ஒரேயொரு நபரின் பெயரை மாத்திரம் பரிந்துரைத்து, அப்பெயர் அரசியலமைப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், ஜனாதிபதி அப்பதவிக்குப் பொருத்தமான வேறு நபர்களின் பெயர்களை முன்மொழியவேண்டும்.

அதனைவிடுத்து தான் முன்மொழிகின்ற ஒரேயொரு நபரின் பெயரை அரசியலமைப்புப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ, அவ்வாறு ஏற்றுக்கொள்ளாவிடின் அரசியலமைப்புப்பேரவை உறுப்பினர்களை அச்சுறுத்துவதோ ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

ஜனாதிபதியின் இந்த எதேச்சதிகாரப்போக்கு தொடருமாக இருந்தால், அது மீண்டுமொரு அரசியல் எழுச்சி ஏற்படுவதற்கும், பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்குமே வழிவகுக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

## அரசும் எதிர்க்கட்சியும்...

சம்பந்தமாக பேசப்படுகின்றது. எங்களுடைய உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் ஒரு தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார். பழைய முறையிலே சென்று தேர்தலை நடத்த முடியும் என்று. ஆகவே, இந்த இரண்டு கட்சிகளையும் பொறுத்தமட்டில் இந்த மாகாண சபை என்பது ஓர் அதிகார போட்டிக்கான விசயமாக இருக்கிறதே ஒழிய தமிழ் மக்களை பொறுத்தமட்டில் இது ஒரு முக்கியமான விடயமாகும். ஆகக் குறைந்தது சிறிதளவாவது நாங்கள் எங்களுடைய பகுதிகளில் இருக்கக்கூடிய விடயங்களை பார்ப்பதற்கான ஒரு சபையாக பார்க்கின்றோம்.

ஏனென்றால் எங்களுக்கு தெரியும் இந்த மாகாண சபை ஒரு முழுமையான தீர்வாக இருக்க முடியாமல் விட்டாலும் நிச்சயமாக அதனை நாங்கள் கொண்டு வரவேண்டும் என்று, நாங்கள் பல தடவைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆகவே இப்போது பிரதமரும் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும் இதனை நடத்தத்தான் வேண்டும் என்று ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று விநயமாக கேட்கின்றோம்.

பிரதமர் அவர்கள் நான்கு மிக முக்கிய அமைச்சுக்கு பொறுப்பாக இருக்கின்றார். மிக முக்கிய அமைச்சுகள் நாட்டின் முழுமையான நிர்வாகத்துக்கு அது பொறுப்பாக இருக்கின்றது. பிரதமர் அவர்களை பொறுத்தமட்டில் அவர் ஒரு நீண்ட காலம் அதாவது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக பாராளுமன்ற அங்கத்தவராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அமைச்சராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அவர் அமைச்சராக இருந்த காலங்களில் எல்லாம் பல பிரச்னைகளை கொண்டு செல்லுகின்ற போது அவர் அதனை கரிசனையாக கேட்டு முழுமையாக நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்.

அவரைப் பொறுத்த மட்டில் இந்த விசயங்களிலே மிக கவனமாக நேர்மையாக யார் எந்த எதிர்க்கட்சியில் இருந்தால் என்ன? அதனை கொண்டு வந்தால் அதனை தீர்ப்பதில் மிக அக்கறையாக செயல்பட்டிருக்கிறார். எங்களுடைய பிரச்னையிலும் நான் நேரடியாக எடுத்து சொன்ன பிரச்னையை அவர் தீர்த்திருக்கிறார். நான் கட்டாயமாக அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேவேளை, வவுனியா - நெடுங்கேணி பிரதேசத்திலே வெடி வைத்தகல் மற்றும் அதன் அயல் பகுதிகளை அநுராதபுர மாவட்டத்தை சேர்ந்த ஒரு பகுதியை கொண்டு வந்து அதிலே இருக்க'கூடிய கிராம நிர்வாகிகள் உடன்சேர்ந்து அதிலே இருக்கக்கூடிய கிராம நிர்வாகத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அந்த கிராமத்திலிருந்து நெடுங்கேணி பிரதேசசபைக்கு 30 கிலோ மீற்றர் காட்டுப்பாதையால் வரவேண்டும். அந்த மக்களே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் அந்த அநுராதபுர மக்களே எழுதி கொடுத்திருக்கின்றார். பிரதேச சபையிலே தங்களை விட்டு விடுங்கள் மீண்டும் அநுராதபுரத்துக்கு போக வேண்டும் என்று. அதை செய்வதற்கு இந்த அரசு தயங்குகிறது. ஏனென்றால் அங்கே ஒரு திட்டம் இருக்கின்றது. நீண்டகாலமாக அந்த திட்டத்தை உருவாக்க பார்க்கிறார்கள்.

போகஸ்வேவ என்ற இடத்திலே ஏற்படுகின்ற குடியேற்றம். இந்த குடியேற்றத்தின் மூலம் அநுராதபுரத்திற்குள்ள நிலங்களை சேர்ப்பது, அங்கு இருக்கக்கூடிய மக்களை சேர்ப்பது வெளி மாவட்டத்திலிருந்து மக்களை குடியேற்றுவது, இதன் மூலம் வவுனியா மாவட்டத்துக்குரிய குடிப்பரம்பலை மாற்றுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

இந்த முயற்சிகள் எல்லாம் எடுத்துக் கொண்டு ஒரு பொருளாதார வளர்ச்சியை பற்றி பேசுவது நிச்சயமாக நடைமுறைக்கு சரிவராது. ஏனென்றால், தமிழ் மக்களை பொறுத்த மட்டில் முழுமனதுடன் இந்த செயல்பாடுகளில் பங்குபற்ற வேண்டும். அவர்கள் முழு மனதுடன் செயல்பாடுகளில் பங்குபற்றுவதாக இருந்தால் அவர்கள் சரியான முறையிலே நடத்தப்பட வேண்டும். அவர்களின் அரசியல் அபிலாசைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதை நிச்சயமாக அரசாங்கம் செய்யவேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய தூதுவர்...

சாரத்துடன் வடக்கு மாகாண அரசியல் தரப்பினரை சந்தித்து உரையாடவுள்ளார்.

இரண்டாவது மற்றும் மூன்றாம் நாளான நாளையும் நாளை மறுதினமும் நயினாதீவுக்குக்கான பயணம் ஒன்றை அவர் மேற்கொள்கிறார். நயினை நாக பூசனி அம்மன் ஆலயத்துக்கும் நாக விகாரைக்கும் சென்று அவர் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

தொடர்ந்து, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நூறு பேருக்கான புலமைப்பரிசில்களை கையளிக்கும் நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளதோடு, தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவிப்பொருட்களையும் கையளிப்பார்.

இதனைவிடவும் மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து இந்திய தூதுவர் கோபால் பாக்லே கலந்துரையாடவுள்ளார்.

டிசெம்பர் மாதத்துடன் இலங்கைக்கான கடமைகளை பூர்த்தி செய்கிறார் தூதுவர் கோபால் பாக்லே. அவர் அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக நியமனம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை இனப்...

'இலங்கையில் உள்ள பிரச்னையை இந்தியா ஒருபோதும் புரிந்து கொள்ளவில்லை. இது உண்மை. இதைச் சொல்ல எனக்குப் பயமில்லை. இந்தியா என்றால் மத்திய அரசை நான் சொல்லவில்லை. தமிழக அரசுக்கு அங்குள்ள உண்மையான பிரச்னை என்னவென்று புரியவில்லை. ஏனெனில் இலங்கையில் இது மிகவும் வித்தியாசமானது. இலங்கையில் தமிழ் சமூகத்தில் பல துணைக்குழுக்கள் உள்ளன. இது அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளன.

எனது தாத்தா தமிழ்நாட்டை சேர்ந்தவர். 1920களில் தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்காக இலங்கை சென்றார். ஆங்கிலேயர்கள் எங்களை வலுக்கட்டாயமாக அங்கு அழைத்துச் சென்றனர். அதனால்தான் இலங்கையில் எங்கள் தலைமுறை உருவானது. நாங்கள் அனைவரும் மத்திய மலைநாட்டில் வளர்ந்தோம். நாங்கள் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பேசும் விதம் வேறு ஆனால், மொழி ஒன்றுதான்.

சிலர் ஒரு பகுதியை பிரித்து தனி நாட்டை உருவாக்க விரும்பினர். மத்திய பிராந்தியத்தில் நாங்கள் தனி நாட்டை விரும்பவில்லை. நாங்கள் அனைவருடனும் இணக்கமாக வாழ விரும்பினோம். இந்தியாவில் உள்ள ஒரு சில அரசியல்வாதிகள் தனது நாட்டில் உள்ள பிரச்னையை புரிந்து கொள்ளவில்லை.

போர் மற்றும் என்ன நடந்தது என்பது பற்றி நான் எதுவும் கூறாததாலும், நான் அரசாங்கத்துக்கு ஆதரவாக பார்க்கப்பட்டதாலும் 5-10 சதவீத அரசியல்வாதிகள் நான் இனத்துக்கு துரோகி என்று நினைக்கிறார்கள் - என்றார்.

அத்துடன், "1995இல், நான் சிக்கலில் இருந்தபோது - நான் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவன், இலங்கைக்காக விளையாடினேன். அப்போது தமிழ் போர் உச்சத்தில் இருந்தது. மதம் அல்லது எதையும் பார்க்காமல் இந்தியாவைப் போலவே இலங்கையும் எனக்கு ஆதரவளித்தது - என்றும் கூறினார். (ஐ)

# பாடசாலை மாணவர்கள் அனுமதியில் மோசடி; இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, நவ. 29

முறையான நடைமுறைகளுக்குப் புறம்பாக பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதில் ஏதேனும் நிதி முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த நிலையில், கல்விச் செயலாளர் 2,367 மாணவர்களை பிரபல பாடசாலைகளில் முறையற்ற வகையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை கணக்காய்வாளர் திணைக்களத்தின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதன்படி, கடந்த வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியற்ற மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் சேர்வதற்கான வாய்ப்பை இழந்துள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், கல்வி அமைச்சின் செயலாளர் மாணவர்களை சேர்ப்பதற்கு 3000 இற்கும் மேற்பட்ட கடிதங்களை வழங்கியுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சில மாணவர்களிடம் முறையான விண்ணப்ப படிவம்கூட இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த கடிதங்கள் பெற்றோருக்கு வழங்கப்படவில்லை எனவும், விண்ணப்பதாரர்களுக்கே கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார். (அ)

## இரு நாட்களுள்...

தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை மே அல்லது ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

## அகழ்வை...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியின் எட்டாவது நாளான நேற்று அகழ்வுப் பணி தொடர்ந்திருந்தது. 4 அடி, 14அடி நீள அகலமுள்ள இந்தக் குழியில் இதுவரை 39 மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

களனி பல்கலைகழகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் வீதியின் மையப்பகுதி வரை புதைகுழி நீள்வதாக தெரிய வந்துள்ளது.

அந்த பகுதியில் அகழ்வு செய்வதெனில் வீதியை அகழ வேண்டியிருக்கும். அங்கு அகழ்வு பணியை மேற்கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் இன்று புதன்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும்.

அகழ்வுப்பணிகள் தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அகழ்வு பணியில் ஈடுபடும் துறைகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து அகழ்வு பணிகளை மேற்கொள்ள வளத்தட்டுப்பாடு நிலவுவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும் கைவிரிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அகழ்வுப் பணியின் இரண்டாம் கட்டம் எட்டு வாரங்கள் இடம்பெறலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. இன்றுடன் இந்த முதலாம் கட்டம் நிறுத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான செலவுத்தொகை தீர்மானிக்கப்படும்.

39 மனித உடல் எச்சங்கள் தவிர துப்பாக்கி சன்னங்கள், ஆடைகள், இலக்கத் தகடுகள், மணிக்கூடு உள்ளிட்ட பொருட்களும் மீட்கப்பட்டன. இந்த மனித எச்சங்கள் விடுதலைப் புலிகளுடையவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ஐ-10)

## புலிகளின்...

மாவீரர் நாளான நேற்று முன்தினம் புலிகள் அமைப்பின் தலைவர், சின்னம் பொறிக்கப்பட்ட ரீசேர்ட் அணிந்து கொடிகாமம் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவேந்தலில் பங்கேற்றார் என்று கூறப்படுகின்றது.

இராணுவ புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினரிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ-03)

## மின்சாரம்...

வங்கி உத்தியோகத்தர் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார்.

இதன்போது, தலையில் ஆணியொன்றும் தாக்கியுள்ளது. உடனடியாக, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் அங்கு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

## மாகாண சபை...

இருக்கிறோம். அதற்கான கலந்துரையாடல்களுக்கு நான் அழைத்திருந்தேன். அதில் சிலர் கலந்துகொள்ளவில்லை.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டபோதும் நிதிப் பற்றாக்குறை இருந்தது. எனினும், அந்தத் தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

பாராளுமன்றத்தில் முன்னைய ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட சட்டமூலமே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தடையாக உள்ளது.

இந்த சமயம், குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, மார்ச் மாதத்தில் மாகாண சபை தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். எனினும், காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சம் கொண்டுள்ளது - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சி. அலவத்துவல, மாகாண சபை தேர்தல் நீண்டகாலமாக நடத்தப்படவில்லை. பழைய முறையில் தேர்தலை நடத்துமாறு நாம் கோரிக்கை முன்வைக்கிறோம் - என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன,

நீங்கள் ஜனாதிபதியை அடிக்கடி சந்தித்து கலந்துரையாடி வருகிறீர்கள் அல்லவா? அதன்போது உங்களது கோரிக்கையையும் முன்வையுங்கள் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தயாசிறி, ரொஷான் சஜித் பக்கம் தாவுவர்!

கொழும்பு, நவ. 29

**அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க மற்றும் சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துக்கொள்ள கூடுமென அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.**

விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவிருந்த ரொஷான் ரணசிங்க, நேற்று முன் தினம் அமைச்சரவை கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சுப் பொறுப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

கடந்த சில நாட்களாக இவர் இலங்கை கிரிக்கெட் சபையில் நிலவிய ஊழல்களுக்கு எதிராக குரல் கொடுத்ததுடன், நிர்வாக சபையை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நீக்க இடைக்கால நிர்வாக சபை ஒன்றையும் ஸ்தாபித்திருந்தார்.

இவரது சில நடவடிக்கைகளால் ஆளுங்கட்சிக்குள் கடும் எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிட்டது. இவர் விரைவில் எதிர்க்கட்சியில் இணைந்துக்கொள்வதற்கான



வாய்ப்புகள் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தகவல் அறியும் வாட்டரங்களில் அறிய முடிந்தது.

இதேவேளை, சு.கவின் உறுப்புரிமை பறிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ள கூடுமென தெரிய வருகிறது.

இந்நிலையில், பல அரசியல் கட்சிகளுடன் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணி ஜனவரி நடுப்பகுதியில் உருவாக்கப்படும். ஆளும் கட்சியின் தற்போதைய அமைச்சர்கள் பலர் புதிய கூட்டணியில் இணையவுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## இன்னும் 2 நாட்களில் ஓ.எல். பெறுபேறுகள்



கொழும்பு, நவ. 29

இன்னும் 2 அல்லது 3 நாட்களுக்குள் 2023 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

2024 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை மே அல்லது ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு அனைத்தும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## ஐ.தே.க. தலைமையில் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளராக ரணில்



கொழும்பு, நவ. 29

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் எனவும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் கூட்டணி ஒன்று அமைக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவ்வாறான எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்மஇரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும், கட்சியின் ஏகமனதான தீர்மானம் இது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது!

### சபையில் கூறிய ரொஷான் ரணசிங்க



கொழும்பு, நவ. 29

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை தொடர்பில் கேள்வியொன்றை எழுப்பினார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன் தினம் ஜனாதிபதி எழுப்பிய இரண்டு கேள்விகளுக்கு பதிலளிக்காமையினால் தாம் பதவி நீக்கப்பட்டதாக, ஜனாதிபதி ஊடகப்பிரிவு, அரச ஊடகமொன்றுக்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சபையில் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், இல்லாத விடயங்களை குறிப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளால் தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறினார். (அ)

## திட்டமிட்டபடி உள்ளூராட்சி தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, நவ. 29

மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் வகையில், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பணத்தை விடுவித்து, திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு கோரியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு பவ்ரல் அமைப்பு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவால் கோரப்பட்ட 10 பில்லியன் ரூபாவில் ஏற்கனவே ஒரு பில்லியன் ரூபாய் தேர்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாவிட்டால் செலவிடப்பட்ட ஒரு பில்லியன் ரூபாவுக்கு பொறுப்புக்கூறுவது யார்? என பவ்ரல் அமைப்பு அந்த கடிதத்தில் பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளது. (அ)

PAFFREL

## மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும்

### சபையில் சித்தார்த்தன் கோரிக்கை

கொழும்பு, நவ. 29

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசாங்கம் விரைவாக நடத்தவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று சபையில் வலியுறுத்தினார்.

பொதுநிர்வாக உள்ளநாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதன்போது, பல ஊழல் மோசடிகள் வெளிவருவதாக சுட்டிக்காட்டிய சித்தார்த்தன், அதிகாரிகள் செய்யும் வீண் விரயங்களை கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## டேவிஸ் கிண்ண ரென்னிஸ்:

# 47 வருடங்களுக்கு பின்னர் சம்பியனானது இத்தாலி!



மலாகா, நவ. 29

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் 47 வருடங்களுக்கு பிறகு சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது இத்தாலி அணி.

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி ஸ்பெயினில் உள்ள மலாகா நகரில் நடைபெற்றது. பட்டம் வெல்வதற்கான இந்தப் போட்டியில் இத்தாலி - அவுஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இத்தாலியின் மேட்டியோ அர்னால்டி, அவுஸ்திரேலியாவின் அலெக்ஸி போபிரினை எதிர்த்து விளையாடினார். இதில் மேட்டியோ அர்னால்டி 7-5, 2-6, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் இத்தாலி 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது ஆட்டத்தில் இத்தாலியின் ஜென்னிக் ஷின்னர், அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதினார். இதில், ஜென்னிக் ஷின்னர் 6-3, 6-0 என்ற நேர் செற்றில் எளிதாக வெற்றி பெற்றார். இதன் மூலம் இந்த மோதலில் 2-0 என வெற்றி பெற்ற இத்தாலி அணி சம்பியன் பட்டம் வென்றது. டேவிஸ் கிண்ணத் தொடரில் இத்தாலி 47 வருடங்களுக்கு பிறகு தற்போது தான் பட்டம் வென்றுள்ளது.

கடைசியாக இத்தாலி 1976ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்றிருந்தது. இதற்கு முன்னர் 3 முறையும், 1976ஆம் ஆண்டுக்கு பின்னர் 3 முறையும் இத்தாலி இறுதி போட்டிக்கு முன்னேறிய போதிலும் கிண்ணத்தை வெல்ல முடியாமல் போனது. இதில் 3 முறை அவுஸ்திரேலியாவிடமே இத்தாலி தோல்வி கண்டிருந்தது. (ஐ)

# குஜராத் ரைட்டன்ஸின் தலைவராக ஷூப்மன்



மும்பை, நவ. 29

சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா மும்பை இந்தியன்ஸ் அணிக்குச் சென்றதால் ஷூப்மன் கில் குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா குஜராத் அணியின் தலைவராக இருந்தார். அணியின் முதல் ஐ. பி. எல். தொடரிலேயே (2022) குஜராத் அணி கிண்ணத்தை வெல்ல வழிவகுத்தார்.

இந்த சூழலில், 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் (ஐ. பி. எல்.) தொடருக்கான வீரர்கள் ஏலம் டிசெம்பர் 19ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்த ஏலத்துக்கு முன்னதாக, ஐ. பி. எல். அணிகள் தங்கள் வீரர்களை பரிமாற்றம் செய்துகொள்ள முடியும். இதன்படி வீரர்களை தங்களது அணியில் வைத்துக்கொள்ளவும் விடுவிக்கவும் முடியும்.

இதன்படி, ஹார்திக் பாண்ட்யா, தற்போது மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சென்றுள்ளார். இதனால், ஷூப்மன் கில்லை அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# "நான் மீண்டும் வந்துவிட்டேன் ரோஹித்"

## ஹார்திக் பாண்ட்யா பதிவு

மும்பை, நவ. 29

தன் கிரிக்கெட் வாழ்க்கை ஆரம்பித்த தன் குடும்பமான மும்பை இந்தியன்ஸூக்கே மீண்டும் திரும்பியது ஓர் உணர்ச்சிகரமான தருணம் என்று ஹார்திக் பாண்ட்யா நெகிழ்ச்சியடைந்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் பகிர்ந்த காணொலியில் ஹர்திக் பாண்டியா கூறியிருப்பதாவது: "நான் வந்து விட்டேன்! ரோகித் (சர்மா), (ஜஸ்பிரித்) பும்ரா, சூர்யா (சூர்யகுமார் யாதவ்), இஷான் (கிஷான்), பொலி (பொலார்ட்), மலிங்க, வாருங்கள், தொடங்குவோம். மும்பைக்கு திரும்பி வந்த தன் உணர்வு பல காரணங்களுக்காக மிகவும் சிறப்பு வாய்ந்தது என்றே கருதுகிறேன். 2015இல் மும்பை இந்தியன்ஸ் உடன் எனது கிரிக்கெட் பயணம் தொடங்கியது. 2013இல் அவர்கள் என் கிரிக்கெட் ஆட்டத்திறனை கவனித்தார்கள். இப்போது நான் அந்தப் பயணத்தை திரும்பிப் பார்க்கும்போது, முழு பத்தாண்டு காலம் என்னமாதிரி இருந்தது. இது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று.

மீண்டும் தாய்வீடு திரும்பிய உணர்வு என்னை முழுவதும் ஆக்கிரமிக்கவில்லை. இறுதியாக எனது முழு கிரிக்கெட் பயணமும் தொடங்கிய இடத்துக்கு நான் திரும்பி





விட்டேன். கிரிக்கெட்டின் மூலம் சாத்தியமான அனைத்து விசயங்களையும் நான் அடைந்துவிட்டேன். ஆகாஷூம் முழு குடும்பமும் என் வாழ்க்கையில் மிக முக்கியமான பகுதியாக இருந்தனர். அவர்கள் என் ஏற்றத்திலும் தாழ்விலும் உடன் இருந்திருக்கிறார்கள், இந்தத் தருணம் உணர்ச்சிவசமானது. ஏனென்றால் நான் மீண்டும் என் வீட்டுக்கு வருவதைப் போல உணர்கிறேன். என் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கி வைத்த மும்பை இந்தியன்ஸ் என்னும் எனது குடும்பத்துக்கு நான் திரும்பி வந்திருக்கிறேன்.

மும்பை இந்தியன்ஸ் நீங்கள் முதல் முறையாக என்னை ஆதரித்தீர்கள். அந்த எல்லா நினைவுகளுக்கும் என் இதயத்தில் ஒரு சிறப்பிடம் உண்டு. நீங்கள் மீண்டும் ஒருமுறை என்னை ஆதரிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நாங்கள் ஒரு குழுவாக வரலாற்றை உருவாக்கினோம். இப்போது மீண்டும் ஒருமுறை சிறுவர்களுடன் சில அற்புதமான தருணங்களை உருவாக்க ஆவலுடன் காத்திருக்கிறேன். என் அன்பான வரவேற்புக்கு நன்றி."

"குஜராத் ரைட்டன்ஸ் அணிக்காக ஒரு சம்பியன் பட்டமும் ஒருமுறை இறுதிப்போட்டிக்கும் தகுதி பெற வைத்துள்ளார் ஹார்திக் பாண்ட்யா. இதன் மூலம் எங்களுக்கு நல்ல தொடக்கத்தைக் கொடுத்தார். இன்று அவர் மாற விரும்பினார் அவரது முடிவை ஆதரிக்கிறோம். அவரின் முடிவுக்கு எங்களது ஆசிகள் எப்போதும் உண்டு" என்று குஜராத் ரைட்டன்ஸ் இயக்குநர் விக்ரம் சோலங்கி தெரிவித்துள்ளார். (ஐ)

# நியூசி. - வங்கம் டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது

டாக்கா, நவ. 29

நியூசிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷூக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் பங்களாதேஷில் நடைபெற்றது. இதில் நியூசிலாந்து தொடரை கைப்பற்றியது. பின்னர் 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரை கருத்தில் கொண்டு டெஸ்ட் தொடர் இந்த மாத இறுதியில் நடக்கவிருந்தது.

இதன்படி டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. சொந்த மண்ணில் நடைபெற உள்ள இந்த தொடரை வெல்வதற்கு நஜ்முல் ஹொசைன் தலைமையிலான பங்களாதேஷ் அணி தீவிர முனைப்பில் உள்ளது.

இதேநேரத்தில் இந்த தொடர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதால் நியூசிலாந்து அணி வெற்றிக்காக போராடும். எனவே இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று காலை 9 மணியளவில் நடைபெற உள்ளது.



# ஐ. பி. எல்லிலிருந்து ஜோ ரூட் விலகல்!

லண்டன், நவ. 29

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலம் டிசெம்பர் 19ஆம்திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ. பி. எல். போட்டியில் இருந்து இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் விலகியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவரான ஜோ ரூட் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ. பி. எல். போட்டியில்தான் அறிமுகமானார். ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்வாகம், ஜோ ரூட்டை அடிப்படை விலையான ஒரு கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்திருந்தது. கடந்த தொடரில் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடினார் ரூட். இந்நிலையில்தான் ஜோ ரூட் அடுத்த ஆண்டு ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். (ஐ)

# நியூசிலாந்தில் புதிய ஆட்சி: புதிய பிரதமராக கிறிஸ்டோபர் லக்சன்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## மவோரி மக்களின் சிறப்பு உரிமைகள் நீக்கப்படுமா?

நியூசிலாந்து பொதுத் தேர்தலில் வலதுசாரிக் கட்சிகள் கூட்டணி அரசாங்கம் அமைத்து வெற்றி அடைந்துள்ளன. இதனையொட்டி பழங்குடி இன மவோரி (Māori People) மக்களுடனான உறவுகளில் பிரச்சினைகள் அந்நாட்டில் தோன்றத் தொடங்கியுள்ளன என மவோரி பழங்குடியின மக்கள் அச்சந் தெரிவித்துள்ளனர்.

இப்பிரச்சினைகளால் அந்நாட்டில் இனப்பிளவுகளை உருவாக்க வலதுசாரிக் கட்சிகள் தூண்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

2020ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் முன்னாள் பெண் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெனின் தொழிலாளர் கட்சி முன்னர் மகத்தான வெற்றி பெற்றது.

**இளம் பெண் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் ராஜினாமா:**

நியூசிலாந்தின் பெண் பிரதமராக, 2017ல் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த ஜெசிந்தா ஆர்டெர்ன், தன் 37வது வயதில் தேர்வு செய்யப்பட்டார்.

உலகிலேயே மிக இளம் வயது பிரதமர் என்ற பெருமையை பெற்ற அவர், குடும்ப சூழல் காரணமாக தன் பதவியை கடந்த ஜனவரியில் ராஜினாமா செய்தார்.

ஆயினும் முன்னாள் நியூசிலாந்து நாட்டின் பிரதமராக இருந்த ஜெசிந்தா ஆர்டன் கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தமைக்கு வேறு பல குற்றச்சாட்டுக்குகளும் அறிவிக்கப்பட்டது. அவரது ஆட்சியில் கொரோனா தொற்று நடவடிக்கை, ஊழல் குற்றச்சாட்டு போன்ற காரணங்களால் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்தார். இந்த நிலையில் நெருக்கடிகள் அதிகரிக்கவே அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து, அக்கட்சியைச் சேர்ந்த கிறிஸ் ஹிப்



கின்ஸ் பிரதமராக பொறுப்பேற்றார். ஐரோப்பாவில் இருக்கும் பல நாடுகள் வலதுசாரி அரசாங்கங்களைத் தேர்ந்தெடுத்த நேரத்தில் நியூசிலாந்து முற்போக்கான கொள்கைகளுடன் தனித்து நின்றது.

மூவாண்டுகள் கழிந்த நிலையில், அந்நாட்டில் சமத்துவமின்மைக்கு எதிராகவும் பழங்குடி இனமான மவோரி மக்களுக்கு ஆதரவாகவும் கொண்டுவரப்பட்ட திட்டங்களை அகற்ற வேண்டும் எனக் கோரி, எதிர்ப்பு கிளம்பியது.

தொழிலாளர் கட்சியின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து, புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல் நேற்று நியூசிலாந்தில் நடந்தது.

இதில், தொழிலாளர் கட்சி, தேசிய கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் போட்டியிட்டன. தேர்தலை தொடர்ந்து, அதில் பதிவான ஓட்டுகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டது. இதில், தேசிய கட்சி 40 சதவீத ஓட்டுகளை பெற்றது.

அடுத்ததாக தொழிலாளர் கட்சி, 25 சதவீத ஓட்டுகளை பெற்று இரண்டாம் இடம் பிடித்தது. இரு கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து, சுதந்திரவாத ஏ.சி.டி., கட்சியுடன் கூட்டணி வைத்த தேசிய கட்சி, அங்கு ஆட்சி அமைக்க உள்ளது.


இதையடுத்து, நியூசிலாந்தின் புதிய பிரதமராக தேசிய கட்சியின் வேட்பாளர் கிறிஸ்டோபர் லக்சன் (Christopher Luxon) பதவியேற்று உள்ளார். தொழிலதிபரான இவர், பல்வேறு முன்னணி நிறுவனங்களில் உயர் பதவியில் பணியாற்றியவர்.

நடந்த முடிந்த தேர்தலில் இனவாதம் மிகவும் வெளிப்படையாகத் தெரிவதாக மவோரி பழங்குடியினத் தலைவரான நைடா கிளாவிஷ் கூறினார்.

வலதுசாரி ஏசிடி கட்சி, பாப்புலிஸ்ட் நியூசிலாந்து ஃபர்ஸ்ட் ஆகிய இரண்டு கட்சிகளும், தொழிலாளர் கட்சி அரசாங்கத்தின்கீழ் மவோரி இன மக்களை நாட்டின் மக்களாக அங்கீகரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு எதிரான கொள்கைகளை ஊக்குவித்து வருவதாக அவர்கள்மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆனால், அக்குற்றச்சாட்டுகளை அவ்விரு கட்சிகளும் மறுத்துள்ளன. தங்கள் கொள்கைகள் இனவெறியைத் தூண்டும் கொள்கைகள் அல்ல எனவும் மாறாக அவை






அனைத்தும் நியூசிலாந்து மக்கள் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதற்கானவை எனவும் அக்கட்சிகள் தெரிவித்தன.

மேலும், மவோரி இன மக்களுக்காக வடிவமைக்கப்பட்ட கொள்கைகளால் பழங்குடியினர் அல்லாத குடிமக்கள் தங்களுக்கான சலுகைகளை இழக்க நேரிடுகிறது என்றும் அவை கூறியுள்ளன.

இந்த தேர்தலில் வாக்குறுதிகளாக பணவீக்கம் மற்றும் அண்ணிய செலாவணி கட்டுப்பாடு, சர்வதேச நாடு



கள் உடனான நட்புறவு, கல்வி, தொழில் ஆகியவற்றை மேம்படுத்துவதாக தொழிலாளர் கட்சி தனது பிரச்சாரத்தை முன்வைத்து பிரச்சாரம் செய்தது.

இதனை எதிர்த்து போட்டியிட்ட கிறிஸ்டோபர் லக்சன் தலைமையிலான தேசிய கட்சி நாட்டின் அரசியல் திட்டங்கள் வகுப்பதில் பூர்வக்குடிகளின் பங்கு, வரி குறைப்பு, இலவச மருத்துவம் ஆகியவற்றை வழங்குவதாக அறிவித்தது.

**நியூசிலாந்து புதிய பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் :**

தற்போது நியூசிலாந்து பிரதமராக பதவியேற்ற கிறிஸ்டோபர் லக்சனின் முதல் முன்னுரிமை, முந்தைய அரசாங்கம் விதித்த சிகரட், புகையிலை கட்டுப்பாடுகளை நீக்குவதாகும். குறிப்பாக சிகரெட்டில் குறைந்த அளவி



லான நிகோடின், சில்லறை விற்பனை குறைப்பு மற்றும் இளைஞர்கள் புகைப்பிடிக்க வாழ்நாள் தடை உள்ளிட்ட கட்டுப்பாடுகளை ரத்து செய்ய புதிய அரசு திட்டமிட்டுள்ளது.

நியூசிலாந்தில் தேசிய கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளுடனான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட நிலையில், புதிய அரசின் பதவியேற்றுள்ளது.

நியூசிலாந்து நாட்டின் முன்னைய பெண் பிரதமராக இருந்த ஜெசிந்தா ஆர்டன் கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆயினும் அவரது ஆட்சிக்காலம் 9 மாதங்கள் கடந்த நிலையில் நாட்டின் 54-வது நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் கிறிஸ் ஹிப்கின்ஸ் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டார். எதிர்க் கட்சியான தேசிய கட்சி சார்பில் அதன் தலைவர் கிறிஸ்டோபர் லக்சன் போட்டியிட்டார். இரு கட்சிகளுக்கும் பெரும்பான்மை குறைவு என்பதால் கூட்டணி கட்சி எம்.பி.க்களை சார்ந்து களம் இறங்கினர்.

கடந்த மாதம் 14ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சியை விட தேசிய கட்சி அதிக இடங்களை பெற்றது. அதன்பின்னர் 2 சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியை கைப்பற்றியது. கூட்டணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட நிலையில், புதிய அரசு பதவியேற்றுள்ளது.

**பிரதமராகும் தொழில் அதிபர் :**

கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்டோபர் லக்சன் (வயது 53), நாட்டின் பிரதமராக பதவியேற்றார். அவருக்கு கவர்னர் ஜெனரல் கிண்டி கைரோ பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பிரதமர் லக்சன், தான் ஏற்றிருக்கும் பிரதமர் பதவியானது, அருமையான பொறுப்பு என்றும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு முதல் முன்னுரிமை கொடுக்க உள்ளதாகவும் கூறினார்.

புதிய அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய ஆட்சியின் 100 நாள் செயல் திட்டத்தை விரைவில் தயார் செய்வது குறித்து ஆய்வு செய்ய உள்ளோம்.

அத்துடன் கூட்டணி ஒப்பந்தத்தின்படி, 2 ஆண்டுகளுக்குள் வரி குறைப்புகள் மற்றும் 500 போலீஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதாக லக்சன் உறுதி அளித்துள்ளார்.

**பூர்வகுடிகள் மாவோரிகள்**

நியூசிலாந்தில் முதலில் குடியேறியவர்கள் கிழக்குப் பொலினீசியாவிலிருந்து வந்த பொலினீசியர்களாவர். மரபணுவழி மற்றும் தொல்லியல் சான்றுகள் இவர்கள் மெலனீசியாவில் இருந்து குடிபெயர்ந்து அங்கிருந்து

(15ம் பக்கம் பார்க்க)

# சாதனை மனிதர்

## அறுபது வயது தாத்தாவின் வீரம்:

## தாடியில் வாகனம் கட்டி இழுத்து சாதனை!



பல துறைகள் சார்ந்து சாதனையாளர்கள் உருவாகிவருகிறார்கள் இவர்களின் சாதனைகள் உலகம் தழுவிய ரீதியில் “கின்னஸ்” புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. கின்னஸ் சாதனையை கடந்து நம்மவர் தனது நரைத்த தாடியினால் வாகனங்களை கட்டி இழுத்து பலத்தை நிருபித்துள்ளார் அறுபது வயது இளைஞர். தாத்தா வயது என்றாலும் அவரது பலமும் வீரமும் என்றும் மார்க்கண்டராக தோற்றம் பெறச்செய்கிறது.

செல்லையா திருச்செல்வம் தையிட்டியில் கருவாகி தென்மராட்சி மட்டுவில் மண்ணில் சாதனை மனிதராக உருவாகி இருக்கிறார். விவசாயம் தான் இவரது வாழ்வியல் ஆதாரம். மனிதர்கள் நிகழ்த்தும் சாதனைகள் பலவற்றை விழிப்புணர்வாக கொண்டு கடின உழைப்பில் ஈடுபட்டார். அது வீண்போகவில்லை வாகனங்களை தாடி மற்றும் தலை முடியில் கட்டி இழுப்பது. வாகனங்களை தன்மீது ஏற்றுவது, விசப்பாம்புகளை கைகளால் பிடித்து கரைசேர்ப்பது என பலவற்றை நிகழ்த்தி காட்டுகிறார் இந்த பயில்வான். ஆரம்பத்தில் 1,500 கிலோ கிராம் எடை கொண்ட லொறி ரக வாகனத்தை தலை முடியில் கட்டி 100மீற்றர் தூரத்திற்கு 47 செக்கன்களில் இழுத்து சாதனை படைத்தார். தான் வாழும் மட்டுவில் மக்களின் ஆதரவுடன் சாதனை பயணத்தை தொடர்கின்றார். இவரது சாதனையின் அடையாளம் சோழன் உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொத்த வரும் பாம்பு அதன் அருகிலே சென்றால் உயிர் போய்விடும். பாம்பை கண்டால் படையும் நடுங்கும் என அச்சத்துடன் தான் நச்சுபாம்புகளை அணுகும் மனிதர்களில் இவர் ஒரு வித்தியாசமாக காணப்படுகின்றார். பாம்புகளை அரவணைக்கும் இந்த பாம்பு நேசரை அணுகிய போது ‘முயற்சியும்,பயிற்சியும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும். முடியாது, தெரியாது, புரியாது என்பதெல்லாம் இயலாமை வார்த்தைகள். முடியும் என முயன்றால் இலக்கை அடையலாம். பாம்புகளும் ஒரு உயிரினம் அதனை விரோதியாக்கி மனிதர்கள் அதனை கொன்றொழிக்கின்றனர். தங்களை காப்பாற்றவே அவை தீண்டுகின்றன. இறைவனின் கழுத்து, கை, கால் என பல இடங்களில் பாம்பு இருக்கிறது. எனவே அதனை கடவுளாக உணரவேண்டும். பாம்புக்கு பால் வைப்பவர்களும்,அதற்கு பூசை புனஸ்காரங்களும் செய்யப்படுகின்றன. சிறு பராயத்திலே பாம்பு மீதான நேசிப்பு என்னிடம் வந்தது. பதின்ம வயதிலே வழி தவறி குடியிருப்பு மற்றும் மனித நடமாட்டம் காணப்படும் இடங்களிலே பாம்பு வந்தால் எல்லோரும் அலறி அடித்து ஓடுவார்கள். நான் அருகில் சென்று பாம்பின் தலைப்பகுதி அமத்தி பிடித்து வாய் அகன்ற போத்தலில் அல்லது பொலித்தீன் பைகளில் வைத்து காடுகள் மற்றும் அதற்குரிய இடங்களிலே விட்டுவிடுவேன். இதுவரை எண்ணுக்கணக்கான பாம்புகளை இவ்வாறு காப்பாற்றியுள்ளேன். பல வகையான பாம்புகள் பிடித்துள்ளேன். அதிகமாக நாகபாம்புகள் பல தடவைகள் சிக்கியுள்ளன.” இவ்வாறு பாம்புகளை லாவகமாக பிடிப்பது எப்படி என்று விளக்கமளித்தார்.

வாகனங்களை கட்டியிழுப்பது, தன் உடல் மீது ஏற்றும் சாதனைகள் தொடர்பாக அவர் கூறியதாவது: “இளமை காலங்களில் சாண்டோ துரைரத்தினம் அவர்களிடம் கற்றவித்தைகளை,வீரசாகசங்களை அவரது சிஷ்யரான ரவி என்ற மாணவரிடம் கற்றுக்கொண்டேன். இந்த தேடலும்,விடாமுயற்சியும் தான் சாதனை செயலுக்கு அத்திவார கற்கள்.

நாட்டுச்சூழ்நிலையால் அரேபிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அலைந்து விட்டு நாடு திரும்பிய பின் சாதனை முயற்சிகளை முன்னெடுத்தேன். தாடியில் கட்டி 40 மீற்றர் தூரம் வாகனம் இழுக்கப்பட்டதே கின்னர்ஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளது. ஆனால் நான் 400 மீற்றர் தூரம் இழுத்துள்ளேன். உழவியந்திரத்தை எனது கால்களில் ஏற்றும் சாதனையும் நிகழ்த்தியுள்ளேன். நான் வாழும் கிராமத்தில் மட்டுமே சாதனை நிகழ்வுகள் நடந்துள்ளன.

யாழ்ப்பாணம் போன்ற நகரப்பகுதிகளில் இதுவரையும் நடத்தப்படவில்லை. எனது சாதனைகள் எவராலும் கண்டுகொள்ளப்படவில்லை. இந்த துறையுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது விளையாட்டு கழகங்கள் இதனை கவனத்தில் எடுக்க வேண்டும் என விரும்புகிறேன். தென்னிந்திய கலைஞர்கள் மற்றும் தென்னிலங்கை பிரபலங்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பட்டு மாண்பேற்றப்படுகிறார்கள் என்னை போன்றவர்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை, ஊக்குவிக்கப்படுவதில்லை. ஆதரவும், வாய்ப்புகளும் கிடைத்தால் அடுத்த கட்ட சாதனையை நோக்கி நகரமுடியும்.

சந்தர்ப்பங்கள் கிடைத்தால் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று இந்த சாதனைகளை நிகழ்த்த முடியும். ஏன் வெளிநாடுகளில் இத்தகைய சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த எங்கள் தொப்புள் கொடிஉறவுகள் இதனை கவனத்தில் எடுக்க வேண்டும்.”

இவ்வாறு தனது பக்க நியாயத்தை விளக்கினார்.

---

# திருமதி குஷ்புவும் விடுதலைப் புலிகளும்!

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

சட்டைப் பையில் மருந்துத் துண்டை வைத்திருந்தாலே கைது செய்கின்ற கொடுமையான அரசு என்றார் திரு. பழ. கருப்பையா அவர்கள்.

மருந்துப் பட்டியலை வைத்திருந்தோம்.

விடுதலைப் புலிகளுக்காக அனுப்ப முயன்றோம்.

என்ற குற்றச்சாட்டில் சிறையில் என்னை இட்ட பொழுது திரு பழ கருப்பையா அந்த அறிக்கையை வெளியிட்டார்.

அப்பொழுது கலைஞர் கருணாநிதி முதலமைச்சர். என்னோடு மிக அன்பாகப் பழகியவர். எனினும் என்னைச் சிறையிட்டார்.

இந்த நிகழ்ச்சி தமிழ்நாட்டில் பலரை மனத்தளவில் பாதித்தது.

மனம் குமுறிய திரைப்பட இயக்குனர் புகழேந்தி இந்த நிகழ்ச்சியைத் தளமாகக் கொண்டு ‘காற்றுக்கென்ன வேலி” திரைப்படத்தை இயக்கித் தயாரித்தார்.

அந்தப் படத்தைத் தணிக்கைக் குழு தடுத்தது. திருத்தம் செய்து மீண்டும் வெளியிட அரசுத் தடை.

தெருவில் பல போராட்டங்கள். நடுவர் மன்றத்தில் பல வழக்குகள். விடுதலைப் புலிகள் சார்பானது என்பதால் இயக்குனர் புகழேந்தி இத்தகைய இன்னல்களைத் தொடர்ந்து சந்தித்தார்.

ஒருவாறு படத்தை வெளியிட்டார். ஆனாலும் அவருக்குப் பொருட் பேரிழப்பு.



அப் படத்தில் குஷ்புவே கதாநாயகி.

விடுதலைப்புலிகள் சார்பான படம் எனத் தெரிந்திருந்தும் அதில் நடித்தார்.

இயக்குனர் புகழேந்தியைப் பேட்டிகண்ட திரு ஐங்கரநேசன் (பின்னர் வடமாகாண அமைச்சர்) இதை முழுப் பக்கக் கட்டுரையாக அன்றைய இலங்கை நாளிதழ் ஒன்றில் வெளியிட்டிருந்தார்.

“சச்சிதானந்தனின் கைது மனத்தளவில் என்னைப் பாதித்தது. அதற்கேற்ற திரைக்கதையை எழுதினேன் குஷ்புவை அணுகினேன் அவரிடம் திரைக்கதையைச் சொன்னேன் எவ்வித தயக்கம் இன்றி உடனே ஒப்புக் கொண்டார்” இயக்குனர் புகழேந்தி சொன்னதாக இந்தச் செய்தியை ஐங்கரநேசன் இலங்கை நாழிதளில் எழுதி இருந்தார்.

அதன்பின்னர் “காற்றுக்கென்ன வேலி” திரைப்படத்தைக் கிளிநொச்சியார் காட்டாத இடமேயில்லை. இயக்குனர் புகழேந்தியையும் கிளிநொச்சிக்கு வரவழைத்துப் பாராட்டினார்கள்.

இதற்காகக் குஷ்புவைப் பாராட்ட வேண்டாமா? நன்றிக் கடன் இல்லாதவர்களா?

எதையும் எதிர்க்க வேண்டும் என்ற கொடுமையான கண்ணோட்டம்.

எதிர்ப்பதற்காகவே எதிர்க்க வேண்டும் என எதிர்ப்பதில் ஒரு துன்பியல் சுகம் காணல்.

வரவேண்டாம் என்று கூறும் நடிகை நடித்த படங்களை அவர்கள் பார்க்காமல் விட்டார்களா?

இப்பொழுது உள்ள சூழ்நிலையில் மக்களிடையே வருவதா தடுப்பதா என வாக்கெடுப்பு நடத்தினால் தடுப்பவர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

---

# நியூசிலாந்தில் புதிய ஆட்சி:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் பயணித்து சொசைட்டி தீவின் வழியே இங்கு வந்தடைந்தனர். இது கி.பி 1280இல் நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவர்களின் வழித்தோன்றல்களே மாவோரிகள் எனப்பட்டனர். இவர்கள் தங்களுக்கெனத் தனித்த பண்பாட்டை உருவாக்கிக் கொண்டிருந்தனர். நியூசிலாந்தின் கிழக்கே உள்ள மிகச்சிறிய தீவான சதாம் தீவுகளில் குடியேறியவர் மொரியோரி மக்கள் எனப்படுகின்றனர். மொழிச் சான்றுகளின்படி இவர்கள் கிழக்கில் பயணித்த மாவோரிகளின் இனத்தைச் சேர்ந்தவர்களே எனக் கருதப்படுகின்றது.

இங்கு குடியேறியவர்கள் இங்கிருந்த 1500களில் அற்றுவிட்ட பறக்காத மோவாவை வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். பயிரிடப்படக் கூடிய பகுதிகளில் குடியேறியவர்கள் சேம்பு, வற்றாளைக் கிழங்குகளை வேளாண்மை செய்யத்தொடங்கினர்.

தற்போது நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் பழங்குடி மக்களான மாவோரிகள்கிழக்கு பொலினீசியாவிலிருந்து வந்தவர்கள். இவர்கள் மாவோரி மொழியைப் பேசுகிறார்கள். 19 நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் வருகையால் மாவோரி அரசுகள் வீழ்ச்சியடைந்தன.

ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய வகை நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி இல்லாமையால் மாவோரிகளின் மக்கள்தொகை 1840 இற்குப் பிறகு பெருமளவு குறைந்தது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மீண்டும் மாவோரிகளின் எண்ணிக்கை கூடத் தொடங்கியது. 1960களிலிருந்து மாவோரி சமூகத்திலும் பண்பாட்டிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

### தமிழர்களும் மாவோரிகளும் :

மாவோரிகள் தங்கள்து முன்னோர்கள் கடல் கடந்து பல பயணங்கள் மேற்கொண்டதாக கூறுவர். இதே கருதுகோள் மற்ற பாலினேசிய பழங்குடிகளுக்கும் உண்டு. இம்மாவோரிகள் பேசும் மாவோரி மொழிக்கும் தமிழுக்கும் பலவித் தொடர்புகள் உள்ளதாக டெய்லர் என்னும் பாதிரியார் கண்டறிந்துள்ளார்.

இதற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வெண்கல மணி ஒன்று நியுசிலாந்து கரியோரா கிராமத்தில் கண்டறியப்பட்டது. இம்மணியைக் கொண்டு வந்த கப்பல் தேக்கு மரத்தால் செய்யப்பட்டது. இதனால் கடல் கடந்து தன் முன்னோர்கள் பயணித்ததாக கூறும் மாவாரிகளுக்கும் தமிழ் மணி நியுசிலாந்தில் கிடைத்துளதால் தமிழருக்கும் அதிக தொடர்புண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுண்டு.